17th December 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 10 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

# செப்டம்பரில் ஜனாதிபதி தேர்தல்?



## ஜனாதிபதி ரணில் உறுதியான முடிவு!

பொதுத் தேர்தலை முதலில் நடாத்துமாறு மொட்டுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதியை வலியுறுத்தி வந்த போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

03ம் பக்கம்பார்க்க...

## ஐ.ம. சக்தியுடன் இணையும் ஜீ.எல்.



சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப வுள்ளதாக

02ம் பக்கம்பார்க்க...

## வெள்ளத்தில் மூழ்கியுள்ள அம்பாறை கரையோர பகுதிகள்

### பிரதேச மக்கள் நிர்க்கதி

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு வாரங்களாக தொடர் மழை காரணமாக பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோர

02ம் பக்கம்பார்க்க...

## பொலிஸ் பதிவு தொடர்பில் மனோவுக்கு ஜனாதிபதி உறுதி



வீடு வீடாக விபரங்களை திரட்டும் பொலிசாரின் பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு

03ம் பக்கம்பார்க்க...

## தப்பிச் சென்றவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க மாட்டோம்



### மஹிந்த சீற்றம்

நெருக்கடியான சூழ் நிலையில் ஆட்சியதிகாரத்தைப் பொறுப்பேற்காமல், தப்பிச் சென்றவர்களிடம் நாட்டு மக்கள் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கப் போவதில்லை என, முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன

02ம் பக்கம்பார்க்க...

## பிரதி, தேசிய அமைப்பாளர்களாக தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள்



### நாமல் அறிவிப்பு

(ஐ. ஏ. காதிர் கான்)

முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் பெரமுன கட்சியில் இரண்டு முக்கிய பதவிகளை வழங்க கட்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும், அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பதவியை

02ம் பக்கம்பார்க்க...

## நீரிழிவு, இரத்த அழுத்தத்தினால்

### இள வயதினர் பெரிதும் பாதிப்பு

(ஐ.ஏ. காதிர் கான்)

இலங்கையில் வருடாந்தம் ஏற்படும் 80 வீதமான

03ம் பக்கம்பார்க்க...

## நாங்கள் சிங்கங்கள்: கல்லால் அடிக்காதீர்கள்



### பசில் எச்சரிக்கை

பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம். நாங்களும் அக்கற்களாலேயே திருப்பி அடிப்போம் என, அந்தக் கட்சியின் ஸ்தாபகரும் தேசிய அமைப்பாளருமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இம்மாநாட்டில் விசேட

02ம் பக்கம்பார்க்க...

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அல்ஜெஸீரா வழக்கு தாக்கல்



அல்ஜசீரா மீடியா காசா பகுதியில் இஸ்ரேலிய ஆளில்லா விமானத் தாக்குதலில் தனது ஊடக

02ம் பக்கம்பார்க்க...

## காலியிலுள்ள அரச ஆஸ்பத்திரியில் கருத்தடைகளை பெறுமாறு நிர்ப்பந்தம்

### முஸ்லிம் மக்கள் அதிருப்தி

### முன்னாள் பிரதி மேயர் பௌசுல் நியாஸ் காட்டம்!

காலியில் உள்ள பிரபல அரச வைத்தியசாலையில் அனுமதி பெறும் கர்ப்பிணிகளுக்கு குழந்தை கிடைத்தவுடன் கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

5 வருடங்களுக்கு குழந்தை கிடைக்காத வகையில் மருந்துகளை

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## ஐ.ம....

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மிகவும் ஆபத்தான பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு எதிராக மக்களைப் பாதுகாப்பதே தமது எதிர்பார்ப்பு என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

கெட்டம்பே ராஜோபவனாராம விகாரையின் தலைவர் அனுநாயக்க கப்பிட்டியகொட சிறிவிமல தேரரை தரிசனம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## வெள்ளத்தில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசங்களில் பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளச்சேனை, கல்முனை, சம்மாந்துறை பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.இதில் அட்டாளச்சேனை 08ம் பிரிவு பிரதேசத்தில் நீர் அதிகமாக தேங்கி இருப்பதனால் மக்கள் அன்றாட வேலைகளை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளனர் இது விடயமாக அட்டாளைச் சேனை பிரதேச சபை நீரோடுவதற்காக வழி வகைகளை செய்வதோடு வீதிகளைப் புணர் நிர்மாணம் செய்யுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## காலியிலுள்ள...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அருந்துமாறு நிர்ப்பந்திக்கப்படுவதாக பல முஸ்லிம்கள் தமது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக காலி முன்னாள் பிரதி மேயரும் ஐ.தே.க. முக்கியஸ்தருமான பௌசுல் நியாஸ் தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன் குழந்தை கிடைத்த முஸ்லிம் பெண் ஒருவரை குறிப்பிட்ட மருந்து வகைகளைப் பயன்படுத்துவதை நிராகரித்தனால் அவரை விடுவிக்காது வாட்டிலேயே வைத்துள்ளனர்.

இவருக்குக் கிடைத்த பிள்ளையை வாட்டிலிருந்து விடுவித்து பல நாட்களாகியும் இவரை விடுவிப்பதற்கு டாக்டர்கள் மறுத்து வருவதாக குழந்தையின் தந்தை இர்ஷாத் உதயத்திற்குத் தெரிவித்தார்.

காலி மாமோதர வைத்தியசாலையின் இத் தீர்மானத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருப்பதாகவும், வைத்தியசாலையின் இத் தீர்மானத்தினால் குழந்தைக்கு தாயின் பாலை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட பெண்மணியின் கணவர் தெரிவித்தார்.

## சர்வதேச...

(முன் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்தின் ஒளிப்பதிவாளர் கொல்லப்பட்டது தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளது.

காசா பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பாடசாலை ஒன்றில் அறிக்கையிடும் பணியில் ஈடுபட்டிருந்த குறித்த ஒளிப்பதிவாளர் இஸ்ரேலின் ஆளில்லா விமானத் தாக்குதலில் வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை கொலை என குறிப்பிடும் அல்ஜசீரா ஊடக நிறுவனம், இது தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மரணத்துடன் அல்ஜசீரா ஊடகவியலாளர்கள் 13 பேர் தமது கடமைகளை செய்து கொண்டிருந்த போதே உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாங்கள்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது, எமது கட்சியின் அரசாங்கம் ஒன்றை, ஆட்சிக்குக் கொண்டு வர அனைவரும் தயாராகுவோம். அதனைச் சிறப்பான அரசாங்கமாக மாற்ற அனைவரும் ஒன்றிணைவோம்.

நாட்டு மக்களை மரண அச்சத்தில் காப்பாற்றிய ஒரே தலைவர், மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே.

அதேபோல், இம்மாநாடு நிறைவடைந்து நீங்கள் ஊருக்குத் திரும்பிச் செல்லும் போது கூட, மஞ்சள் கடவையைத் தவிர வேறு இடத்தால் பாதையைக் கடந்து செல்ல வேண்டாம் என நான் அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன்.

எந்த இடத்திலாவது எமது தவறுகளைக் கண்டுபிடிக்க சமூக ஊடகங்கள் காத்துக் கிடக்கின்றன. இதனால், நாம் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

நாம் மிகவும் ஒழுக்கமான, மஹிந்த ராஜபக்ஷ எமக்குக் கற்றுக் கொடுத்த உன்னத பாடங்களைப் படிப்பினையாகக் கொண்டு, எமது கட்சியை முன் மாதிரியான கட்சியாக மாற்றி, எதிர்வரும் காலங்களில் செயற்பட முன்வர வேண்டும்.

நாம் முதுகெலும்பு இல்லாதவர்கள் என்று எண்ணிவிடக் கூடாது.

நாங்கள் எதற்கும் தயாராக இருக்கின்றோம் என்பதை, எம்மை எதிர்ப்பவர்களுக்கு அடித்துக் கூற வேண்டும். இந்நிலையில், யாரும் எதற்கும் அச்சம் கொள்ள வேண்டாம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அடுத்த தேர்தலில் நிச்சயம் வெற்றிபெறும்.

வீதியில் செல்லும் நாய் மீது கல்லெறிந்தால், நாய் குரைத்து விட்டு, மேலும் வேகமாக ஓடும்.

ஆனால், சிங்கத்தின் மீது கல்லெறிந்தால், கல்லெறிந்தது யார் என்று திரும்பிப் பார்க்கும். நாங்களும் அந்த சிங்கத்தைப் போன்றவர்கள்.

எனவே, எங்கள் மீது கல்லெறிய வேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்வோம். நாங்கள் அடுத்த முறை ஜெயிப்போம். நிச்சயம் வென்று காட்டுவோம் எனவும் பஷில் ராஜபக்ஷ சவால் விடுத்தார்.

## பிரதி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிடமாக வைக்க கட்சி தீர்மானித்துள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் (16) சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"பசில் ராஜபக்ஷ ஒரு நிறுவனராக இருந்து, கட்சி அமைப்புப் பணிகளைச் செய்கிறார். அதனால், தேசிய அமைப்பாளர் பதவியை வெற்றிடமாக விடுவது என, அவரும் கட்சியினரும் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.

எதிர்காலத்தில் நாம் எடுக்கும் அரசியல் தீர்மானங்களின் அடிப்படையில், அதற்குத் தேவையான ஒருவரை நியமிப்போம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மீண்டும் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டதுடன், புதிய பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி நியமிக்கப்பட்டார்.

அத்துடன், மேலும் இரண்டு பிரதி தேசிய அமைப்பாளர் பதவிகள் உருவாக்கப்படவுள்ளதாகவும், கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, புதிதாக உருவாக்கப்படவுள்ள இரண்டு பிரதி தேசிய அமைப்பாளர் பதவிகளையும், முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், ஒரு முஸ்லிம் ஒரு தமிழர் என்ற அடிப்படையில் இரண்டு உறுப்பினர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தப்பிச்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, எம் மீதான விமர்சனங்கள் ஒன்றும் புதிதல்ல எனவும், 2015 ஆம் ஆண்டிலும் இவ்வாறான சேறு பூசுதல்களே காணப்பட்டன எனவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு - சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் (15) வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், "அரகலய" என்ற போர்வையில் இடம்பெற்ற அநீதிகளை ஆராய்ந்து, இந்நாட்டில் நீதியை நிலை நாட்டுவதற்கு ஆணைக்குழுவொன்றை உடனடியாக நியமித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும், மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.


அவர் மேலும் உரையாற்றுகையில்,

நெருக்கடியான சூழ்நிலையில் ஆட்சியதிகாரத்தைப் பொறுப்பேற்காமல் தப்பிச் சென்றவர்களிடம், மீண்டும் அந்த ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்க மக்கள் தயாராக இல்லை.

இதேவேளை, எம் மீதான விமர்சனங்கள் ஒன்றும் எமக்கு புதிதல்ல. 2015 ஆம் ஆண்டிலும் இவ்வாறான சேறு பூசல்களையே மேற்கொண்டார்கள்.

எது எவ்வாறாயினும், நாங்கள் எதிர்வரும் தேர்தல்களில் நிச்சயமாக வெற்றி பெறுவோம். எங்களால் மாத்திரமே சவால்களை முறியடிக்க முடியும் என்றும் இதன்போது மஹிந்த ராஜபக்ஷ உறுதிபட சுட்டிக்காட்டினார்.








கவர்ச்சிகரமான சேர்ட்களை உற்பத்தி செய்வதில் பிரபல்யம் பெற்ற ஐ கிங் நிறுவனம் அதன் விற்பனை நிலைமொன்றை கடந்த வியாழன்று புறக்கோட்டை பாகோட வீதி, 120 இலக்க இடத்தில் திறந்து வைத்தது. திறப்பு விழா ஐ. கிங். நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரிசான் வாஹித் தலைமையில் நடைபெற்றது.

பிரபல சமூக சேவையாளரும் தொழிலதிபருமான அல்ஹாஜ் பௌஸ் இதனைத் திறந்து வைத்தார். நிறுவனத்தின் பங்காளர் மின்ஹாஜ் நிஸார் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிறுவனத்தின் இரண்டாவது கிளை நிர்வாகம் இதுவாகும்.

ஏற்கனவே இவர்களுடைய விற்பனை நிலையம் புறக்கோட்டையி ஏற்கனவே இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.






கம்பஹா கல்வி வலய அத்தனகல்ல கோட்டத்தின் கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவு கணிதப் பாசறை அண்மையில் இடம்பெற்றது.இதில் பங்கேற்ற கம்பஹா கல்வி வலய ஆரம்ப பிரிவு பணிப்பாளர் கே.கே தினேஷா தரங்கனி , தமிழ் மொழி மூல உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் டி எம் தௌஸீர், அதிபர் எம் எம் எம் சர்ஜுன், ஆகியோர் பாசறையை ஆரம்பித்து வைப்பதையும் , ஆரம்ப பிரிவு பகுதித் தலைவி எம் எம் கே மௌபியா விளக்கமளிப்பதையும் , பிரமுகர்கள் பார்வையிடுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

## செப்டெம்பரில்...

(முன் பக்கத் தொடரச்சி)

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக ஓர் உறுதியான முடிவெடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கே அவர் முடிவு செய்திருக்கிறார்.

அநேகமாக இத்தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் நடத்தப்படலாம் எனத் தெரிய வருகிறது.

ஜனாதிபதியுடன் நெருங்கிச் செயற்படும் மொட்டுக் கட்சிக் குழுவினர் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துமாறு கோரியிருந்தனர்.

ஜனாதிபதியுடன் நெருங்கிச் செயற்படும் மற்றொரு குழு ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்றும் கேட்டிருந்தனர். ஜனாதிபதி தற்போது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளார்.

## பொலிஸ்...

(முன் பக்கத் தொடரச்சி)

சபையில் கலந்துரையாடி பதிலளிக்கிறேன் என இது விடயமாக தன்னை சந்தித்த மனோகணேசன் எம்பியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி தனது அதிகாரபூர்வ எக்ஸ்-டுவீடர் தளத்தில், "இது தொடர்பில் ஜனாதிபதியின் முடிவு அறியப்படும்வரை, அரசியல் யாப்பில் இருக்கின்ற, ஆட்சி மொழி சட்டத்தை மீறுகின்ற இந்த பொலிஸ் பதிவு படிவங்களை நிராகரிக்கும்படி மக்களை கோருகிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

## நீரிழிவு...

(முன் பக்கத் தொடரச்சி)

மரணங்கள், தொற்றா நோய்களினால் நிகழ்வதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 35 வயதுக்குக் குறைவான மக்கள் தொகையில் 15 வீதமானோர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்கள் மத்தியில் சரியான உடற்பயிற்சி கள் இல்லாமல் இருப்பதே, இவ்வாறான நோய் அறிகுறிகள் தென்படக் காரணியாக அமைந்துள்ளது.

பெரும்பாலானோர், உடற் பயிற்சி செய்வதில் சிறிதேனும் ஆசை அல்லது ஆர்வம் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் உடற் பயிற்சி செய்வதில், அசட்டையாகவும் அலட்சியமாகவும் இருந்து வருவதும், ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானவர்களின் நலன் கருதி, நாட்டிலுள்ள ஒவ்வொரு அரச வைத்தியசாலைகளிலும் மிக விரைவில் உடற் பயிற்சி (அலகு) பிரிவுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு முன்னெடுத்து வருவதாகவும் சுகாதார அமைச்சு அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்

# குவைத் மன்னர் மறைவு: அனுதாபக் கையெழுத்து!

## இன்று முதல் ஆரம்பம்



குவைத் மன்னர் ஷேக் நவாப் அல்-அஹ்மத் அல்-சபாவின் மறைவையொட்டி அனுதாப புத்தகத்தில் கையெழுத்திடுவதற்காக குவைத் தூதரகத்தில் இன்று முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, குவைத் தூதரகத்தில் மூன்று நாட்களுக்கு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

அதேநேரம் குவைத்தூதரகம் (ஞாயிறு, திங்கள், செவ்வாய்) மூன்று நாட்களுக்கு அனுதாப புத்தகத்தில் கையெழுத்திடுவதற்காக காலை 10.30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை வரை திறந்திருக்கும்.

குவைத்தின் மன்னர் ஷேக் நவாஃப் அல்-அஹ்மத் அல்-சபா, மூன்றாண்டுகள் ஆட்சியில் இருந்த நிலையில் அவர் தனது 86 ஆவது வயதில் காலமானார்.

குவைத் அரசின் மன்னர் ஷேக் நவாப் அல்-அஹ்மத் அல்-சபாவின் மறைவுக்கு மிகுந்த சோகத்துடனும், துக்கத்துடனும் இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 DECEMBER 17 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# நீதியான தீர்ப்பினால் மகிழ்ச்சியடையும் மக்கள்

கடந்த இரு மாதங்களுக்குள் முஸ்லிம் தொடர்பாக நீதித்துறை மூலம் நியாயம்வழங்கும்தீர்ப்புக்களைஇருவேறுநிறுவனங்களால்வழங்கப்பட்டது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த ரம்ஸி, அஹ்னப் ஜெஸீம் ஆகிய இருவரும் குற்றமற்றவர்களாக தீர்ப்பளிக்கப்பட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவர் மீதும் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டது குறித்து ரம்ஸி ராசிக் மற்றும் அஹ்னப் ஜெஸீமின் குடும்பங்கள் மட்டுமன்றி நீதியை மதிக்கும் சகல தரப்பினரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பண்டாரவளையைச் சேர்ந்த இளம் கவிஞர் ஆசிரியர் அஹ்னப் ஒரு விவசாயியின் மகன். ஒரு ஆசிரியரும், கவிஞரும் ஆவார். எந்தக் குற்றத்துக்காக இவர் கைது செய்யப்பட்டார் என்பதனை நிரூபிக்க முடியாததானாலேயே நீதிமன்றம் இவரை விடுதலை செய்தது. நவரசம் என்ற நூலை வைத்தே இவர் கைது செய்யப்பட்டார். அஹ்னப் ஜெஸீமுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாத காரணத்தினாலேயே இவரை விடுவிப்பதாக புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அப்ரினா சுவந்துருகொட கடந்த 12ஆம் திகதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

மாணவர்களுக்கு அடிப்படை வாதத்தை தூண்டி பிற மதத்தவர்கள் மீது பகைமையை வளர்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

அவர் கற்பித்த பாடசாலையின் அதிபர், மாணவர்கள் உட்பட ஐந்து சாட்சியங்கள் ஊடாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாததனாலேயே அவரை விடுவிப்பதாக நீதிபதி தெரிவித்தார்.

அஹ்னப் மூலம் அவர் படித்த ஜாமியா நளீமியா, இலங்கை ஜமாதே இஸ்லாமி மாணவர் அமைப்புக்கு எதிராக சாட்சியங்களை பெறுவதற்கு முயற்சித்தனர். அதற்காக விளக்கமறியலில் வைத்து அவர் பலவாறு துன்புறுத்தப்பட்டார். அஹ்னப் பல வகையான சித்திரவதைகளை எதிர்கொண்ட போதும், தான் கற்ற நளீமியாவுக்கு எதிராக பொய் சாட்சி கூற மாட்டேன் என்பதில் உறுதியாக இருந்துள்ளார். அஹ்னப்பின் இந்த துணிகரமான செயல் பாராட்டுக்குரியது.

இரண்டரை வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அஹ்னப்பினை விடுவிப்பதோடு நின்று விடாது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளவருக்கு நஷ்டஈடு வழங்கப்படுவதோடு அநியாயமாக அஹ்னப் மீது குற்றச்சாட்டுக்களை ஜோடித்து அவரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். அதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான அப்பாவிகள் கைது செய்யப்படுவதை தவிர்க்க முடியும்.

இவர் ஏழை விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். சுயமாக இவர்களுக்கு இந்த வழக்கினை தொடர்வதற்கு முடியாமலேயே இருந்தது. இவ்வழக்கின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ருஸ்தி ஹபீப் தலைமையிலான சட்டத்தரணி குழு இலவசமாக ஆஜராகி இந்த விடுதலையை அவருக்குப் பெற்றுக் கொடுத்தார்கள். ஆரம்பத்தலிருந்தே அஹ்னப் மீது நீதி கோரி வாதாடிய இளம் சட்டத்தரணி சன்ஜய் தில்சான் பாராட்டுக்குரியவர். அதேநேரம் முஸ்லிம் சமூகத்துக்கு இனவாத முத்திரை குத்தும் காலத்தில் இந்த வழக்கில் ஆஜரான இளம் சட்டத்தரணி அஹ்ஸனுக்கும், அவரது குடும்பத்துக்கும் முஸ்லிம் சமூகம் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளனர்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) "உதயம்"
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...
அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

# பட்ஜட்: ஓய்விலுள்ள மஹிந்தவின் உழைப்புக்கு கிடைத்த வெற்றி!



சுஜப் எம்.காசிம்



ரணிலின் சவால்மிக்க பயணத்துக்கு கிடைத்த அங்கீகாரமே பட்ஜட் வெற்றி. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்டுக்கோப்புடன் உள்ளமையும் இந்த வெற்றியில் வெளிப்பட்டுள்ளது. நிறைவேற்றதிகாரம் கைமாறப்பட்ட பின்னர் நடப்பவற்றில் பல, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை புறந்தள்ளுவதாக உள்ளன.

நீண்டகாலமாக இழுத்தடிக்கப்படும் அமைச்சரவை நியமனம், மாவட்ட மற்றும் தொகுதி விடயங்களை கருவறுக்கும் ரணிலின் போக்குகளால் கட்சியின் முக்கியஸ்தர்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர். கடிவாளம் கட்சியிடம் உள்ளதால் காலோசித முடிவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காத்திருப்பதாகவே பலரும் கருதினர். பிறக்கவுள்ள புத்தாண்டு தேர்தலுக்கு வித்திடவுள்ளதால் கட்சி நலன்களே பட்ஜட்டில் செல்வாக்குச் செலுத்துமென்ற ஊகங்களும் உலவின. ஆனால், பட்ஜட்டின் இரண்டாம் வாசிப்பு நவம்பர் 21 இல், 45 மேலதிக வாக்குகளால் வெல்லப்பட்டதிலிருந்து இந்த ஊகங்கள் நீங்கத்தொடங்கின. இந்த ஊகங்கள் நீங்கத் தொடங்கியதிலிருந்து சில விடயங்கள் துலங்கவும் தொடங்கின.

மஹிந்த ராஜபக்ஷவின் மவுசு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் நிலைக்கும் வரை, ரணிலின் மவுசுக்கு மறைமுகக்கரங்கள் பலமூட்டும். ரணிலைப் பாதுகாத்து நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாப்பது, பொருளாதாரத்தை கட்டியெழுப்பி தம்மீதான பழிகளை போக்கிக்கொள்வது. இவையிரண்டும் இந்த அரசாங்கத்தின் இரட்டைச் சக்கரங்கள். இந்த நிலைப்பாட்டில்தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை வழிநடத்துகிறார் மஹிந்த.

மூன்றாம் வாசிப்பு வெல்லப்படும் வரை மஹிந்தவின் அரசியல் மூளை உறங்கியிருக்காது. உறங்கியிருந்தால் 41 மேலதிக வாக்குகளால் மூன்றாம் வாசிப்பு வென்றிருக்காது. இதனால்தான், ஓய்வுக்காக வீட்டிலிருக்கும் மஹிந்த, உழைப்போடுதான் ஓய்வெடுப்பதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது. ஐக்கிய தேசிய கட்சியால் ஆட்சியை பிடிக்குமளவுக்கு வளர முடியாதென்பது ஆசிரியரின்றி உணரப்படும் அறிவு போன்றது. இதனால், ரணிலின் எந்தளவு உயர்வும் ராஜபக்ஷக்களுக்கு பொருட்டில்லை. ஐக்கிய மக்கள் சக்தி தலைவரின் வளர்ச்சியையே சவாலெனக் கருதுகின்றனர். வளரும் தலைமைகளுக்குள்தானே போட்டி, வயதாவோருக்கிடையில் இல்லையே!

இதனால்தான், இரண்டு வாக்களிப்புக்களிலும் நாமல் ராஜபக்ஷ பங்கேற்கவில்லை. தென்னிலங்கைத் தளங்களைத் துருவித்துருவி ஆராய்ந்தாலும் காரணத்தை கண்டுகொள்ள முடியவில்லை. முதுகெலும்புள்ள தலைவராக அடையாளம் காட்டப்படுவதற்காக இவர் பயிற்றப்படலாம் அல்லது பக்குவப்படுத்தப்படலாம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 05 ஆவது மாநாட்டில் மஹிந்த ஆற்றிய உரைக்குள்ளிருந்த முடிச்சுக்களை இப்போது அவிழ்க்க முடியாது. ஏதாவதொரு தேர்தல் வரைக்கும் மெதமுலானவின் மூடிய அறைக்குள்ளேயே இந்த முடிச்சுக்கள் இருக்கும். எந்தத் தேர்தலுக்கும் தயாரென்கிற மஹிந்த, கட்சிக்கு ஒரு வாரிசைத் தேடாமலா இருப்பார்.

இதேபோன்ற ஒரு பொருளாதார வீழ்ச்சி இந்தியாவில் 1991இலும் தாய்லாந்தில் 1997இலும் ஏற்பட்டது. சர்வதேச நாணய நிதியம், ஜெயிக்கா நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் உதவிகளோடுதான் இந்த நாடுகள் மீண்டெழுந்தன.

இப்போதுள்ள நிலையில், சர்வதேச உதவிகளைப் பெறுமளவுக்கு ராஜபக்ஷக்களின் செல்வாக்குகள் இல்லை. இதனால், ரணிலூடாக காய்களை நகர்த்துகிறது அரசாங்கம். சிறந்த பொருளியல் விவாதத்தை முன்வைத்து பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றினார். நுகர்வுகளுக்காக கடன் பெறவில்லை, முதலீடுகளுக்காவே பெறப்படுகிறது. காப்பீட்டு நிதியாக 150 மில்லிய ன் டொலர் கிடைத்துள்ளது. இவற்றினால், நாட்டின் கடன்பத்திரங்களை சர்வதேச நாடுகள் ஏற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வங்கிக் கணக்கில் பணம் இருக்கையில் காசோலை எழுதுவதுபோலதான் இது.

காப்பீட்டு நிதி கையிருப்பிலிருந்தால், கடன் பத்திரங்களை வழங்கி வெளிநாடுகளில் எரிவாயு, எண்ணெய் மற்றும் சீனி போன்ற எதையும் கொள்வனவு செய்ய முடியும். வந்ததை விற்று கடனை செலுத்துவதுடன், காப்பீட்டு நிதியை கையிருப்பாக பாதுகாக்கவும் இயலும். மேலும் 48 மாத விரிவாக்கப்பட்ட கடனாக 337 மில்லியன் டொலரையும் ரணில் கொண்டுவந்துள்ளார்.

இந்த முயற்சிகளுக்கு அரசியல் சாயம் பூசப்படுவதை ஜனாதிபதி விரும்பவில்லை. நாட்டை பொறுப்பேற்க பயந்தவர்கள், இன்று பிசாசுக் கதைகளை கூறுவதாக பாராளுமன்றத்தில் அவர் சாடியதும் இதைத்தான். ஆனால், ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் எதிரணிகளும் சந்தர்ப்ப சாயங்களைப் பூசிக்கொள்ளப் புறப்பட்டுள்ளன. அழுதாலும் பிள்ளை அவள்தானே பெற வேண்டும் என்றிருக்கையில், எவளோ பெற்ற பிள்ளைக்கு யாரோ அழுவது போலுள்ளன ரணிலின் முயற்சிகள்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு கட்டுப்பட்டு கடன்களை கொண்டுவருவதால் வரி, வட்டி, விலைகள் அதிகரிக்கின்றன. இந்த யதார்த்தம் அரசியல்வாதிகளுக்கு புரிந்தாலும் பாமர மக்களுக்கு புரியாமலாக்கும் முயற்சிகளே இன்றைய அரசியலாகியுள்ளன. பட்ஜட்டை எதிர்த்துப் பேசிய சில கட்சிகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாததும், மறைமுகமாக ரணிலுடன் பேசியதும் ஒரு வகை இயலாமைதான். சில வேளைகளில் மக்களே இந்த நியதிகளை உணரும் நிலை வரலாம்.

# மின்சாரத்துறையில் நடந்த மற்றுமொரு ஊழல் மோசடி குறித்த தகவல்கள்

## ஆதாரங்களுடன் வெளிக்கொணர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



700 மெகாவாட் சூரிய சக்தி மின் உற்ப்பத்தி திட்டம், 100மூ மின்கல சேமிப்புக் கட்டமைப்பு,கடத்தி இணைப்புகளும் உள்ளடங்களான கிளிநொச்சி பூநகரி சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையத்தை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டிருந்தாலும்,முறையான கொள்முதல் நடைமுறைகளுக்குப் புறம்பாக அந்தத் திட்டத்திற்காக அவுஸ்திரேலிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதாகவும், இது மற்றுமொரு ஊழல் நிறைந்த கொடுக்கல் வாங்கலுக்கான பிரவேசம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (15) விடுத்துள்ள விசேட காணொளி அறிவிப்பில் தெரிவித்தார்.

2022 ஜூன் 9 ஆம் திகதி அன்று இலங்கை மின்சாரத் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, 10 மெகாவாட்டிற்கு மேல் புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றல் திட்டங்களுக்கு டெண்டர் முறையை அமுல்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி யோசனை முன்வைத்த சந்தர்ப்பத்தில்,இந்த யோசனையை பொறுப்பான அமைச்சர் முதலில் இணக்கம் தெரிவிருந்திருந்தாலும் பின்னர் எதிர்த்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம் நாட்டிற்கான ஒரு வளமாகும் என்றாலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் போட்டித் தன்மை நீக்கப்பட்டதன் காரணமாக,இங்கு மாபியா தற்போது செயல்பட்டு வருவதாகவும்,எந்த அனுபவமும் தகுதிகளுமற்ற நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு இந்த “உரிமப் பத்திரங்கள் மறுவிற்பனை செய்யும் மோசடியும்” இடம்பெற்று வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பூநகரி சூரிய சக்தி மின்னுற்பத்தி திட்டத்தில் பாரிய ஊழல் தலைவிரித்தாடுவதாகவும்,இதில் போட்டித் தன்மை தவிர்த்து தமது நெருங்கிய நண்பர்களுக்கு இத்திட்டத்தை வழங்குவதானது நாட்டுக்கு பாதிப்புகளை விளைவிக்கும் செயல் என்றும்,இந்த வகையில், அமைச்சரவை செயலாளர் தலைமையில் இதில் ஈடுபட்டுள்ள அனைத்து அதிகாரிகளும் நாட்டிற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்நிறுவனத்தால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் இயலுமை உள்ளதா இல்லையா என்பதை மதிப்பீடு செய்யவில்லை என்றும்,யுனைடெட் சோலார் எனர்ஜி ஸ்ரீலங்கா பிரைவேட் லிமிடட் என்ற இந்நிறுவனத்தின் இணையதளத்தின் பிரகாரம்,இவர்கள் செய்த எந்தத் திட்டம் தொடர்பான தகவலையும் அவர்களால் உறுதிப்படுத்த முடியாதுள்ளதாகவும்,

இந்நிறுவனம் 6 கண்டங்களில் உள்ள 20 நாடுகளில் 37 திட்டங்களை மேற்கொண்டுள்ளதக கூறப்பட்டாலும்,இது தொடர்பாக எந்தவிதமான பௌதீக ரீதியான ஆதாரமும் கிடைக்கவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இது தேசிய சொத்துக் கொள்ளை என்றும், 2024 தேர்தலில் படுதோல்வியை சந்திக்க நேரிடும் என்பதால் போட்டி முறையை மாற்றி, இதுபோன்ற திட்டங்களை தற்போதைய அரசாங்கம் செயல்படுத்தி வருவது, இவ்வாறான சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பணம் சம்பாதிப்பதற்காகவா என்ற சந்தேகம் எழுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

2023 மார்ச் 15 ஆம் திகதி முதல் யுனைடெட் சோலார் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனம் ஒரு மோசடியான நிறுவனமாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் பெயரிட்டு,

இந்நிறுவனத்துடன் எந்தவித கொடுக்கல் வாங்கல்களையும் செய்ய வேண்டாம் என்று கூறியுள்ளதால்,இந்நாட்டு புலனாய்வு ஊடகவியலாளர்கள் உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# பிஜிஐஏ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கத்தாரில் இடம் பெற்ற விருது வழங்கல் நிகழ்வு



பிஜிஐஏ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கத்தாரில் இடம் பெற்ற சமூகசேவை விருது வழங்கள் நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர் எம். ஜே. பிஸ்ரின் மற்றும் ஊடகவியலாளர் சமாதி பீரிஸ் ஆகியோர் சிறந்த ஊடாகவியலாளர்களுக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த சர்வதேச நிகழ்வை சப்னா தௌபீக் ஏற்பாடு செய்திருந்ததுடன் இந்த நிகழ்வின் பிரதம அதிதிகளாக கத்தார் நாட்டுக்கான இலங்கைத்தூதுவர் எம். மபாஸ் முஹிதீன், கத்தார் நாட்டுக்கான பங்களாதேஷ் தூதுவர் எம்.டி நஸ்ருல் இஸ்லாம் மற்றும் கத்தார் நாட்டின் தொழிலதிபர் பர்ஹான் அல் செய்த் அகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஊடகவியலாளர் பிஸ்ரின் முஹம்மத் இலங்கை ஊடகத்துறையில் நீண்டகாலம் பணிபுரிந்து பல தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்ற ஒரு இளம் ஊடகவியலாளர் அதேவேளை கத்தார் நாட்டில் இயங்கிவருகின்ற முதலாவது ஒரே தமிழ் வானொலியான QFM தமிழில் பணிபுரிந்து வருகின்றார்.

ஊடகவியலாளர் சமாதி பீரிஸ் இலங்கையில் ஊடகத்துறையில் நீண்டகாலம் பணிபுரிந்ததுடன் கத்தாரில் ஒலிபரப்பாகும் முதல் சிங்கள வானொலியான ஏகுஆ சித்துலவின் இஸ்தாபகர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே வேளை இலங்கை மற்றும் இந்தியாவை சேர்ந்த பல்துறை சார்ந்தோருக்கும் இந்நிகழ்வில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

# இனிப்பும் கசப்பும்

- வைஸ் -

இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே!

ஆசிரியர் தினத்தையொட்டி ஒரு முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்கள் நடனமாடியதைக் கண்டிக்க வந்த ஒரு மௌலவிப் பட்டம் பெற்றவர் அதைக் கண்டிப்பதற்கு இந்துக்கள் தெய்வீகமாக மதிக்கும் பரதநாட்டியத்தை அசிங்கமாக விமர்சிக்கப் போய் நடந்த விபரீதங்களை நாம் கண்டோம். அந்த மௌலவியின் முகநூல் அந்த இனத்தை மட்டுமல்ல, முஸ்லிம் அமைப்புகளையும் தஃவா இயக்கங்களையும் குழப்பி விட்டுள்ளது. உலமா சபையையும் ஏனைய தஃவா அமைப்புகளையும் விமர்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பரதநாட்டியம் என்பது தமிழர்கள், இந்துக்கள் தெய்வீகமாக மதிக்கும் அவர்களது கலாசார பண்பாடு கொண்ட நடனம். குறிப்பிட்ட முஸ்லிம் பாடசாலை ஆசிரியர் ஆடிய நடனத்தை கண்டிக்க வந்தவர் பரதநாட்டியம் பற்றிய புதியதோர் வரைவிலக்கணத்தைக் கொடுத்துள்ளார். இறுதியிலே பரதநாட்டியம் பற்றிய அந்த மௌலவியின் பத்வா பரதநாட்டியம் என்பது வேசிகள் ஆடும் நடனம் என்பதாகும். அதாவது விலை மாதர்கள் ஆடும் நடனம் என்பதாகும்.

இதனையடுத்து தமிழர் இந்துக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு வந்தது. ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. அந்த மௌலவி தாங்க முடியாது அந்த மக்களிடம் மன்னிப்புக் கோரினார். பரதநாட்டியம் என்ற பெயர் பாரத நாட்டில் இருந்து வந்தது. அல்லது மௌலவி கூறியபடி பரத்திமாரது நடனமா என்பது நாம் ஆராய வேண்டிய விடயமல்ல. அதுவும் யாரோ தனக்கு கூறியதாக அந்த மௌலவி சமாளிக்கிறார். அவருக்குக் கூறிய அந்த அறிஞர் யார் என்பதை மௌலவி கூறவில்லை. ஒருவர் என்று கூறி முயன்றார்.

மௌலவி காட்டிய நடனத்தைப் பார்ப்பவர்களுக்கும் அது பரத நாட்டியமாகத் தெரியவில்லை. அதுவும் பரதநாட்டியத்தை பெண்களே ஆடுவர்.

ஆண்கள் ஆடுவதில்லை. அந்த ஆசிரியர் மேலேத்தேய நடனம் போன்றே ஆடினார்.

எனவே, அந்த ஆசிரியரின் நடனத்துடன் பரதநாட்டியத்தை ஏன் மௌலவி இணைக்க வேண்டும். அதற்கு ஏன் வரைவிலக்கணம் கூற வேண்டும். அவரது பிரேக் இல்லாத வாய் செய்த வேலையா? அல்லது ஏதாவது ஒரு வகையில் பிரபல்யம் அடைய வேண்டும் என்று நினைத்தாரோ தெரியவில்லை!

மன்னிப்பு கேட்கப்பட்டாகிவிட்டது. தமிழ் இந்து மக்கள் சிறிது அமைதியாகிவிட்டார்கள். மேல் நடவடிக்கைகளையும் எதிர்ப்பையும் நிறுத்திவிட்டார்கள். மன்னிக்கும் பண்பை செயற்படுத்தினார்கள்.

ஆனால், முஸ்லிம்கள் அதை விடவில்லை. இந்தப் பிரச்சினை பல வழிகளில் செல்கிறது.

இந்த மௌலவியின் செயற்பாட்டைக் கண்டித்து உலமா சபை அறிக்கை வெளியிட்டது. சமூகத் தளங்களிலும் கருத்து வெளியிட்டது. இது பற்றியும் ஒரு குழு விமர்சனம் கூறியது.

இது பிரச்சினையாக உருவாகிய பின் தஃவா இயக்க ரீதியாக இரண்டு குழுக்கள் பிரிக்கப்பட்டன. குறிப்பிட்ட மௌலவி சார்ந்துள்ள தஃவா இயக்கம் சார்பானவர்கள் முதலில் உலமா சபை மீது ஏவுகணைகளை விடுக்கத் தொடங்கினர்.

இதற்கு முன் நாட்டில் நடந்த சம்பவங்களின் போது ஏன் உலமா சபை அமைதி காத்தது?, இதற்கு மாத்திரம் உடனடியாக கண்டிக்க முன் வந்தது ஏன்?, இது ஏன் இவ்வளவு அவசரமாக சபைக்கு வந்தது? என்று கேள்வி கேட்கத் தொடங்கினர். பதிவுகளை இடத் தொடங்கினர்.

இந்தக் குழுவினர் தஃவா இயக்கத்தை முன்வைத்தே இந்த எதிர்ப்பைக் காட்டுவதாகவே தெரிகிறது. குறிப்பிட்ட மௌலவி தீவிரமாக இயங்கும் தஃவா இயக்கத்துக்கு மாற்றாக உள்ள இன்னுமொரு தஃவா இயக்கத்தவர்களே உலமா சபையில் இருந்து கொண்டு இதைச் செய்கிறார்கள். அந்த மௌலவி செயற்படும் தஃவா இயக்கத்தை எதிர்க்கும் நோக்கில் இதனைச் செய்கின்றனர் என்பதே மௌலவி ஆதரவாளர்களின் கருத்தாகும்.

இதனிடையே தஃவா பணி செய்யும் சில குழுக்களிடையேயும் மோதல் உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்சினையை முடித்து விடும் நோக்கம் இருதரப்புக்கும் இல்லை. சேறு பூசிக்கொண்டே இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் போராட்டத்தை மன்னித்து, மறக்கடித்து பிரச்சினை முடிவதாக இல்லை. மீண்டும் தொடர்வதாகவே இருக்கிறது. சம்பந்தப்பட்ட இனத்தவர்கள் மன்னித்தாலும் முஸ்லிம்கள் மறந்ததாக இல்லை.

மௌலவி பிழையாகச் செயற்பட்டதை மறுக்க முடியாது. இஸ்லாம் ஏனைய மதங்களை விமர்சிக்க இடமளிக்கவில்லை. பிழை என்று ஏற்றே மன்னிப்புக் கேட்கப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பிட்ட பாடசாலையில் ஆசிரியர் நடனமாடியது தேசிய பிழையா என்பது சிந்திக்கப்படவேண்டிய விடயம். ஆடியவர் இசையுடன் ஆடினார் என்பதையும் கவனிக்க வேண்டும். அவர் நடனமாடியது அவரது ஆசிரியர் கௌரவத்துக்குப் பாதிப்பைத் தரும் என்பதையும் பார்க்க வேண்டும். மற்றவர் பார்க்க முன் அவரவர்களே செயலைச் செய்யும் முன் இது சரியா, பிழையா, பொருத்தமானதா எனச் சிந்திக்க வேண்டும்.

மௌலவியும் ஆசிரியரும் சிந்தித்து சரியாக செயற்பட்டிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் வர வழியில்லை. அவர்களுக்கும் அவர்கள் சார்ந்த சமூகத்துக்கும் அவப்பெயரும் ஏற்பட வழி இல்லை. உலமாக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உரிய மதிப்பை கௌரவத்தைப் பேணும் வகையில் அவர்கள் இருந்தால், சிந்தித்துச் செயலாற்றினால் ஒரு பிரச்சினையுமில்லை.

இங்கு சம்பந்தப்பட்டவர்களால் அவர்களுக்கு மட்டுமல்ல அவர்கள் சார்ந்த நிறுவனங்களுக்கும் அது அவமானமாக அமையும். மௌலவியின் செயல் ஏனைய உலமாக்களின் மதிப்பைக் குறைக்கும். ஆசிரியர்மார்களின் செயல் ஆசிரியர்களின் மதிப்பை கௌரவத்தை குறைக்கும்.

எனவே இங்கு இறுதியாகக் கூற வருவது, ,”இருக்கும் இடத்திலிருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே!” என்பதாகும்



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

# கண்ணீர் தேசம்...



அமெரிக்கா என்ற தேசம் உருவானது சடலங்கள் மீதே என்கிற வரலாறு பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம்.

இன்று அமெரிக்கா பாலஸ்தீன பகுதியில் ஒரு இனத்தை அழிக்க எல்லா வகையிலும் உதவிகள் செய்து வருகின்ற நிலையில் அவர்களின் மூல வித்தாக இருக்கின்ற இன அழிப்பின் தொடர்ச்சியாகவே இது போன்ற இன அழிப்பின் காரணமாக அமைந்துள்ளது என்பது பலருக்கு தெரியாத விடயமாக கூட இருக்கலாம்.

அமெரிக்கா என்கிற தேசத்தை கண்டுபிடிக்கும் முன் இந்தியாவிற்கு வர்த்தக நோக்கில் கடல்வழி போக்குவரத்தை காண விரும்பிய ஐரோப்பியர்கள் தங்கள் பயணத்தை திசை மாறி சென்ற நிலையில் நிலையில் தான் ஏதோவொரு நிலப்பரப்பு தென்பட்டது . அது தான் இன்றைய ருவெைநன ளுவயவநள ழக யுஅநசைஉய என்று அழைக்கப்படுகிற அமெரிக்கா தேசம். இந்த அமெரிக்கா தேசத்தை உருவாக்க அவர்கள் மிகப்பெரிய அளவில் உயிர்களை ஈவு இரக்கமின்றி படுகொலைகளை செய்து தான் இன்றைய முழுமையான அமெரிக்கா என்று அழைக்கப்படுகிறது.

இதற்காக பிரித்தானிய, ஸ்பெயின் தேசத்தை சார்ந்த குடிகள் செய்த அநீதி மிகப்பெரிய பெரிய அளவிலான இரத்த வரலாறு என்பது தான் உண்மை. மறைக்கப்பட்ட இந்த ரத்த சுடுதி வரலாற்றில் கொன்று குவிக்கப்பட்ட மொத்த உயிர்களின் எண்ணிக்கை 1,20000000 (ஒரு கோடியே இருபது இலட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டது என்பது மிகுந்த வலியை ஏற்படுத்தும் செதியாகும்.)

மிகுந்த ஆதாரங்கள் நிறைந்த கருத்தின் அடிப்படையில் 20,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலப்பரப்பில் நுழைந்தவர்கள் தான் பூரண குடிகள்.இவர்களையே நயவ ஐனெயைn ழசயபெநள யுஅநசைஉய என்று அழைக்கப்படுகிறார்கள்.ஒரு கட்டத்தில் இவர்கள் மிகுந்த அளவில் நாகரீகமான முறையில் வளர்ச்சி அடைந்த பழங்குடி இன மக்களான வாழ்ந்து வந்தனர். இது போன்ற நாகரீக வளர்ச்சியின் விளைவாக Astic, Mayan and Inca civilization ஆக உருவாகி இருந்தனர். இப்படி உருவான நாகரீகங்கள் அனைத்தும் ( colonization )ஐரோப்பிய பிரித்தானிய, ஸ்பெயின் வருகையால் முழுமையாக அழித்தொழிக்கப்பட்டது. அதாவது, மண்ணின் மைந்தர்களாக வாழ்ந்து வரும் பழங்குடியினரின் வாழ்க்கை முறையினை முற்றிலுமாக இவர்கள் அழித்து விட்டு உருவானது தான் இன்றைய அமெரிக்கா என்பதில் எந்த ஐயமும் இல்லாத வரலாற்று உண்மையாகும்.

1543 ல் முதன் முறையாக இந்த மண்ணில் அதுவும் கலிபோர்னியா கடற்கரையில் கால்பதித்தவர்கள் தான் ஸ்பெயின் நாட்டை சேர்ந்தவர்கள்.அதே சூழலில் 1600 களில் பிரித்தானிய நாட்டை சேர்ந்தவர்கள் இந்த பகுதியில் முதன் முறையாக நுழைய ஆரம்பித்தனர்.இதன் விளைவாக 1600 களுக்கு பிறகு இந்த மக்களின் வாழ்க்கையை சூறையாடியதில் மிகப்பெரிய பங்கு ஐரோப்பிய தேசத்தினருக்கு மட்டுமே உண்டு என்பது கசப்பான உண்மையாகும். இந்த நாசகார செயலில் ஈடுபட்டு அந்த மக்களின் வாழ்க்கை முறையினை அழித்தொழித்த பெருமை பிரித்தானிய, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் ரஷ்யர்களுக்கு உண்டு என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை.

ஜ14ஃ12, 10:23 யுஆ ஆந யுயஅநன ளுயவைாஉ: 3)ஐரோப்பிய தேசத்தினர் தங்களின் காரியங்களை சாதித்து கொள்ள எந்தவொரு எல்லைக்கும் செல்வார்கள் என்பது தான் இந்த வரலாற்று சான்றுகள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. முதல் முறையாக 1543 ம் ஆண்டுகளில் கலிபோர்னியா கடற்கரையில் கால்பதித்தது ஸ்பெயின். அதற்கு பிறகு 226 ஆண்டுகளுக்கு பிறகு தான் அதாவது 1769 ல் தான் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளில் இறங்கினார்கள் பிரித்தானியர்கள். அதாவது தங்கள் ராஜ்யத்தை உருவாக்கும் நோக்கில் செவ்விந்தியர்களை அதாவது அமெரிக்கா பழங்குடி மக்களின் உயிர்களை மாடுகளை விடவும், தெருநாய்களை விடவும் மிகவும் மோசமான முறையில் நடத்தினர். 20000 ஆண்டுகளாக வாழ்ந்து வந்த பூரண குடிகளின் வாழ்வியல் அடையாளத்தை முற்றிலுமாக அழித்தனர். இந்த நிலையில் எப்படியெல்லாம் அவர்கள் துன்புறுத்தலுக்கு ஆளானார்கள் என்பதை அந்த காலத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் மூலம் நாம் காண கூடியதாக இருக்கிறது.இதனை பார்க்கும் போது மிகுந்த மனவேதனையை ஒவ்வொரு மனிதனின் மனங்களிலும் நிச்சயமாக ஏற்படும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த அளவுக்கு மிகவும் மோசமான முறையில் தான் அமெரிக்கா பழங்குடி மக்கள் நடத்தப்பட்டனர். அந்த ஓவியத்தில் குதிரையின் மேல் அமர்ந்து கொண்டு பழங்குடி மக்களை சாட்டையை வைத்து அடித்து துன்புறுத்தும் மனித நேயமற்ற செயல்கள் இன்றும் தத்ரூபமான முறையில் வரையப்பட்டுள்ளதை நாம் காண கூடியதாக இருக்கிறது.இதற்கு ஸ்பெயின் ஆக்கிரமிப்பாளர்கள் வைத்து கொண்ட பெயர் தான் ( spiritual conquest) என்று வேறு பெயரை சூட்டிக் கொண்டனர்.ஏனெனில் தவறான பழக்கவழக்கங்களை கொண்ட அமெரிக்கா பழங்குடி சமூகத்தினரை திருத்துவதற்கு தான் இது போன்ற நியாயமான நடவடிக்கை என்று அவர்கள் நியாயம் பேசுவதையும் நாம் காண கூடியதாக இருக்கிறது. இந்த நடவடிக்கை மூலம் பழங்குடி சமூகத்தினர் சாத்தானின் கட்டுபாட்டில் இருந்து வருவதால் அவர்களுக்கு இது போன்ற கடுமையான ஆன்மீக சிகிச்சைகள் தேவை என்று வெளிப்படையாக பேசியவர் தான் கிறிஸ்தவ மத போதகர் பாதர் ஜீனிபேரா பேரா என்பவர். குறிப்பிட்டு சொல்வதென்றால் அமெரிக்கா பழங்குடி மக்களின்மீது கிறிஸ்தவ போதகர்கள் மிக கடுமையான கொடூரமான தண்டனைகளை மதத்தின் அடிப்படையில் விதித்தார்கள். இது பலருக்கும் தெரியாத உண்மை தான். இது தான் வெறுப்பின் அடிப்படையில் ஆன கடந்த காலங்களில் நடைபெற்ற இழிவான வரலாற்று ரீதியான பதிவுகளாக இருந்து வருகிறது..

கிறிஸ்தவ மதம் சகிப்புத்தன்மை கொண்டதா என்கிற கேள்விக்கு நாம் தெளிவான பதிலை தேட வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாக உணர்ந்து கொள்ள முடிகிறது. கிறிஸ்தவ போதகர் பாதர் ஜீனிபேரா மிக கடுமையாக தண்டனைகளை பழங்குடி மக்களின் மீது ஏவினார் . இவர் போன்ற ஏராளமான கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த அமைப்புகள் பல்வேறு கெடுபிடிகள் மற்றும் இரக்கம் இல்லாத தண்டனைகளை அந்த மக்களின் மீது ஏவியது மட்டுமல்லாமல் இதற்கான விசேட அனுமதியை கூட ஸ்பெயின் அரசாங்கத்துடன் இருந்து பெற்று கொண்டார்கள். ஸ்பெயின் கால்பதித்த கலிபோர்னியா கடற்கரையில் கட்டப்பட்ட ஏராளமான கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் உண்டான மிகப் பெரிய கட்டடங்கள் அமெரிக்கா செவ்விந்திய பழங்குடி மக்களின் கடுமையான உடல் உழைப்பால் தான் உருவானதுதான் என்பதை நாம் இன்றும் காணலாம். இது போன்ற கொடுமைகள் குறித்து 1946 ல் ஆய்வு செய்த ஜர்னலிஸ்ட் இது உலக வரலாற்றில் மற்றொரு நாஜி கேம்ப் என்று குறிப்பிடுகிறார். அந்த அளவுக்கு கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த போதகர்கள் மிகவும் கடுமையான அராஜகத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். பல பெண்கள் கிறித்தவ மதத்தை ஏற்றுக்கொண்ட நிலையில் அவர்கள் மீது இந்த பாலியல் வன்புணர்வு கொடுமை இரட்டிப்பு ஆனதாக வரலாற்றை படிக்கும் போது நாம் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

இத்தனை கொடுமைகளை சந்தித்த போதும் அமெரிக்கா செவ்விந்திய பழங்குடி மக்கள் உடைந்து போகவில்லை. ஆனால், தங்கள் சொந்த சமூகத்தின் பெண்கள் மீது பாலியல் அத்துமீறலை ஐரோப்பிய ஸ்பெயின் கிறிஸ்தவர்கள் மற்றும் பாதிரிகள் செய்ய துணிந்ததை கண்டு அந்த மக்கள் அப்படியே உடைந்து போய் விட்டார்கள். யாரிடமும் நியாயம் கேட்க முடியாத அளவுக்கு ஒடுக்கப்பட்டனர். ஆயுத பலம் கொண்ட ஐரோப்பியர்களை எதிர்த்தவர்கள் வரை முறை இல்லாத அளவுக்கு படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த நிலையில் ஸ்பெயின் கிறிஸ்தவர்கள் அங்குள்ள அமெரிக்கா செவ்விந்திய பழங்குடி மக்களுக்கு ஏற்படுத்திய கண்ணீர் கதைகள் நாம் படித்து முடித்த போது இயற்கையாகவே நம் கண்ணீர் நீர் ததும்பாமல் இருக்க வாய்ப்பே இல்லை. ஏனெனில் இந்த கொடுமைகள் குறித்து ஸ்பெயின் அரசிடம் புகார் கொடுக்கப்பட்டது. ஆனால், இதற்கெல்லாம் எந்த விதத்திலும் ஆதாரங்கள் இல்லை என்று அந்த அரசு முற்றிலுமாக புகார்களை நிராகரிப்பு செய்து விட்டது. 1773 ம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கவர்னர் பெட்ரோ பேஜஸ் நியமனம் செய்யப்பட்ட நிலையில் அவர் மீது அவரது மனைவியே புகார் பதிவு செய்து இருந்தார். அந்த புகாரில் எனது கணவர் கவர்னர் பெட்ரோ பேஜஸ் 13 வயது நிரம்பிய பழங்குடி குழந்தையிடம் தொடர்ந்து பாலியல் வன்புணர்வு செய்கிறார் என்று அவரது மனைவி புகார் கொடுத்து இருந்த போதிலும் வழக்கின் முடிவில் அவர் குற்றம் அற்றவராக அறிவிக்கப்பட்டு நிலையில் அவரது மனைவி கைது செய்யப்பட்டார். அதேநேரத்தில் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த போதகர்கள் மிகவும் இழிவான பாலியல் அத்துமீறலை பழங்குடியினர் மீது நடத்தினார்கள். கிறிஸ்தவ மத போதகர்களின் பாலியல் வன்புணர்வு மிகவும் அசிங்கமான , அருவருப்பான செயல் என்பதில் எந்த விதத்திலும் கருத்து வேறுபாடும் யாருக்கும் இருக்கவே வாய்ப்பே இல்லை என்பதே வரலாற்று பதிவாகும்.

இந்த கொடுமைகள் எப்படி நடந்தது என்பதை நாம் ஒரே வரியில் புரிந்து கொள்ள முடிகிறது. இரவு நேரங்களில் கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் (nuns) தங்கியிருக்கும் பகுதிக்கு இரவில் நுழைந்த பாதிரிகள் தலைமை கன்னியாஸ்திரியை (superior nuns) பாட்டு பாட சொல்லுவார்களாம். அந்த வேளையில் அநேகமான பழங்குடி பெண்களிடம் தங்கள் இச்சையை தீர்த்து கொள்வார்கள் என்பது எத்தனை பேருக்கு தெரியும் ? இந்த கொடுமைகளுக்கு பயந்து கிறிஸ்தவ மதத்தை வலுக்கட்டாயமாக தழுவிய பழங்குடி பெண்களின் மீதே இது போன்ற அத்துமீறலை அவர்கள் நடத்தினார்கள் என்கிற மோசமான வரலாற்றை நாம் அனைவரும் புரிந்து கொண்டே ஆக வேண்டும்.

உலகத்திற்கு சமாதானம் பெருவாழ்வு என்கிற தலைப்பில் மக்களை வசீகரிக்கும் இவர்களின் கூடாரங்களில் இன்றும் இதுபோன்ற பாலியல் அத்துமீறல்கள் இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டே தான் இருக்கிறது.

இந்த கொடூரமான சித்ரவதைக்கு உட்படுத்தப்பட்ட ஏராளமான பழங்குடியின பெண்கள் கிறித்தவ முகாம்களில் இருந்து வெளியேறி தப்பித்து சென்றனர். இதனைத் ஐரோப்பியர்கள் கண்டுபிடித்து அவர்களை தங்கள் முகாம்களுக்கு மீண்டும், மீண்டும் இழுத்து வந்து பாலியல் அத்துமீறலை தொடர்ந்தனர்.மனித நேயமற்ற இந்த கொடூரத்தை தலைமையேற்று நடத்தியது ஐரோப்பிய கிறித்தவ மதத்தின் தலைமை போதகர்கள் என்பது எத்தனை வருத்தமான செய்தி என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இதற்கு இடையில் பிரித்தானிய இன குழுக்கள் செய்த அட்டூழியங்களில் இருந்து தங்களை தற்காத்துக் கொள்ள பழங்குடி சமூகத்தினர் மிகப் பெரிய அளவில் போரைத் தொடங்கினார்கள்.இந்த போரில் பலர் கைதுசெய்யப்பட்டு பழங்குடியினரால் கிராமத்தில் உள்ள அவர்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டனர். அப்படி அழைத்துச் செல்லப்பட்ட ஒருவர் தான் திருமதி மேரி ரோலன்ஸ் என்பவர். அவர் பின்நாளில் எழுதிய புத்தகம் தான் பழங்குடி சமூகத்தினரை குறித்து நிறைய வரலாற்றை நாம் தெளிவாக அறிந்து கொள்ள மிகப் பெரிய அளவில் உதவியது. திருமதி மேரி ரோலன்ஸ் தனது புத்தகத்தில் நான் எந்த நிலையிலும் பழங்குடி சமூகத்தினரால் பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தப்படவில்லை . திரும்பி சொல்வதென்றால் பழங்குடி இளைஞர்கள் கூட எங்களை திரும்பி கூட பார்க்கவில்லை என்று பெருமையுடன் எழுதுகிறார். இந்த நிலையில் அமெரிக்கா என்ற செவ்விந்திய பழங்குடி மக்களின் பூமியில் கால்பதித்த பிரித்தானிய ஐரோப்பிய குழுக்கள் நேற நுபடயனெ என்ற ஒரு காலனித்துவ அமைப்பை நிறுவினார். இந்த மெசோசைட் பழங்குடியினர் தலைவர் தங்களுக்கு நாங்கள் உதவி செய்கிறோம். ஐரோப்பியர்களாகிய நீங்கள் எங்களுக்கு ஏனைய இனக்குழுக்கள் மூலம் வருகிற அச்சுறுத்தலை தடுக்கும் வண்ணம் எங்களுக்கு ஆயுதங்களை தர வேண்டும் என்று பரஸ்பரம் ஒப்பந்தம் செய்து விட இது தான் இங்கிலாந்து நாட்டின் ஆக்கிரமிப்பாளர்களுக்கு மிகுந்த வாய்ப்பாக அமைந்தது. ஐரோப்பியர்கள் நேரம் கிடைக்கும் போதெல்லாம் இனக்குழுக்கள் இடையேயான பகையை ஊதி பெரிதாக்கி அவர்கள் ஒன்று சேர்ந்து விடாமல் இருக்க தந்திரோபாய நடவடிக்கைகளை பிரித்தானிய படையினர் செய்தனர். ஆங்கிலேயர் கடந்த காலங்களில் வரலாற்றில் அவர்கள் சமூகத்தில் பிரிவினை ஏற்படுத்தி தான் உள்ளே புகுந்த வெற்றி கொள்ளும் வழக்கம் கொண்டவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்கிடையில் பிரித்தானிய குழுக்களுடன் மோத முடியாத அளவுக்கு பழங்குடியினர் வலிமை இழந்ததற்கான மிக முக்கியமான காரணம் அவர்களிடம் இருந்து ஒற்றுமையின்மை தான்.. இதனைப் பயன்படுத்திய ஐரோப்பிய குழுக்கள் பல்வேறு வடிவங்களில் படுகொலைகளை செய்ய ஆரம்பித்தனர். இந்த படுகொலைகளை கண்டு ஒட்டு மொத்த பழங்குடியினரும் ஆடிப்போயினர். 1700 ம் ஆண்டு காலகட்டங்களில் அவர்கள் பாரிய போய் எந்த நிலையிலும் உதவி தேட முடியும் என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு காலகட்டத்தில் இந்த படுகொலைகளை அதிகமாக செய்தவர்கள் பிரித்தானிய குழுக்களால் பாராட்டப்பட்டனர். அவர்களை அன்றைய பிரித்தானிய ஆட்சியாளர்கள் பாராட்டி Indian hunter's என்கிற அடிப்படையிலான பட்டங்களையும் வழங்கினார்கள்.

இந்த கொடூரமான சித்ரவதைக்கு உட்பட்டு இருந்த செவ்விந்திய அமெரிக்கா பழங்குடியினர் இடியாக வந்த அந்த சட்டத்தின் மூலம் கொஞ்சம் நஞ்சமாக இருந்த நம்பிக்கையும் தகர்ந்து போனது.1830 அமெரிக்கா அதிபராக இருந்த ஆன்ரு ஜாக்சன் கொண்டு வந்த ஒரு சட்டத்தின் பெயர் குழசஉநன சுநஅழஎயட ழக ஐனெயைள.. இந்த சட்டத்தின் மூலம் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சொந்தம் கொண்டாடி வந்த அமெரிக்கா செவ்விந்திய பழங்குடி மக்களின் நிலங்களை விட்டு அவர்கள் வெளியேறி விட வேண்டும் என்றும் அவர்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்பதே அதுவாகும். இந்த அநீதியை எதிர்த்து தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த இடத்தை விட்டு அகல மறுத்த செவ்விந்திய பழங்குடியினர் வலுக்கட்டாயமாக படையினர் மூலம் அப்புறப்படுத்தப்பட்டனர். செல்லும் வழியில் பல ஆயிரக்கணக்கான செவ்விந்திய பழங்குடி மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி கொத்து கொத்தாக மடிந்து போனார்கள். தங்கள் இனத்தை சேர்ந்தவர்கள் இந்த சோக வரலாறு இன்றும் வுசயடை ழக வுநயசள என்று வரலாற்றில் பழங்குடி மக்களால் இன்றும் இந்த சம்பவம் நினைவு கூறப்படுகிறது.

இந்த கொடுமைகளுக்கு ஆளாகிய செவ்விந்திய பழங்குடியனர் ஒரு காலகட்டத்தில் ஐரோப்பியர்களின் சட்டத்தை ஏற்று அமைதியாக வாழ்ந்து வந்தனர். அதன் அடையாளமாக ருவெைநன ளுவயவநள ழக யுஅநசைஉய வின் கொடியை கூட தங்கள் பகுதியில் பறக்க விட்டனர். இந்த நிலையிலும் கொடூரமான மனநிலை கொண்ட கிறிஸ்தவ மெத்தடிஸ்ட் சர்ச் பாதிரியார் ஜான் சிவிங்கிடன் அந்த மக்களின் மீது மோசமான தாக்குதலை நடத்தி 200 க்கு மேற்பட்ட செவ்விந்திய அப்பாவி பொதுமக்கள், குழந்தைகள் படுகொலை செய்தார்.

இந்த வெற்றியை அவர்கள் கொக்கரித்து கொண்டாடினாலும் இன்றும் இந்த சம்பவம் வரலாற்றில் Sand Greek Massacre என்று தான் அழைக்கப்படுகிறது. அதற்கு காரணம் கிறிஸ்தவ மதம் அவர்களை எந்த விதத்திலும் பண்படுத்தவில்லை. மாறாக அவர்களின் செயல்பாடுகள் அடிப்படை மனிதர்களுக்குரிய எந்தவொரு இரக்கம், பண்பாட்டையும் கூட அவர்களுக்கு கற்று தரவில்லை என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் ஒட்டு மொத்த தேசமும் தன்னுடையதாக சொந்தம் கொண்டாடி வந்த அமெரிக்கா செவ்விந்திய பழங்குடியினர் இன்று வெறும் 370 இடங்களுக்கு மட்டுமே சுறுக்கப்பட்டு விட்டனர். அவர்களிடம் இருந்த கொஞ்ச இடமும் பல்வேறு சட்டத்தின் வாயிலாக ரியல் எஸ்டேட் மாஃபியா கும்பல்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டனர். அவர்களுக்கு அமெரிக்காவில் எந்த விசேட ஒதுக்கீடுகள் இருப்பதாக தெரியவில்லை என்கிறார்கள் ஆய்வாளர்கள். பல ஆயிரக்கணக்கான பழங்குடியினர் இன்று வறுமையில் தள்ளப்படும் விட்டனர். இவர்களில் உரிமை வேண்டி அமெரிக்காவில் சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து போராடி வரும் நிலையில் இந்த குரல்களை கேட்க யாருமே இல்லை என்பதே உண்மை. ஆனால், அமெரிக்கா அரசு உலகில் மனித குலத்தின் நியாயத்திற்கு போராடுவது போல பேசி வருவது நகைப்பிற்குரிய ஒன்றாகவே அறியப்படுகிறது.

உலகில் மிகப்பெரிய வல்லரசு நாடாக அடையாளம் காணப்படுகிற நாகரீகத்தின் தொட்டில் என்றே நம்மில் பலர் இன்றும் அமெரிக்கா குறித்து பெருமிதம் கொள்வதை காணமுடிகிறது. உலக கிறிஸ்தவ நாடுகளின் தலைமை தேசமாக, மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தேசமாக அமெரிக்கா கட்டமைக்கப்பட்டுள்ளது.

நான் உங்களுக்கு இதுவரை எழுதியவை மிகவும் குறைவான அளவு மட்டுமே. கடந்த காலங்களில் அமெரிக்கா என்கிற தேசத்தை உருவாக்க ஐரோப்பியர்கள் நடத்திய இன அழிப்பை (Genocide) உலக வரலாற்றில் வேறு எங்கும் நடந்திருக்கவில்லை என்பதே உண்மையாகும்.. பல கோடிக்கணக்கான புனிதமிக்க உயிர்களை எந்தவொரு நியாயமும் இல்லாமல் அவர்களால் காவு கொடுக்கப்பட்டது. இன்று வரை இந்த உயர்ந்த நாகரீகத்தின் அடிப்படை முழுமையான இரத்த சுதிகள் பழந்த பயங்கரமான வரலாறு என்பதை தான் காலம் பறைசாற்றுகிறது. இந்த பூமியில் மனிதர்கள், புல், பூண்டுகள் இல்லாமல் போகும் காலம் வரை இதற்கான நியாயத்தை இந்த பூமி கேட்டுக் கொண்டேயிருக்கும் என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம் என்பதே அனைவரின் பார்வையாகும்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபாவாக வழங்குக!

## ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறார் இம்ரான் எம்.பி.



முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த சம்பள கொடுப்பனவை 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மாபெரும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சிறுவர்கள் மகளிர் வலுவூட்டல்கள் மற்றும் இளைஞர் விவகாரங்கள் தொடர்பான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் இவ்வாறு கூறினார்.

நாட்டை ஆண்கள் ஆண்டு கொண்டிருக்கின்றார்கள். வீட்டு நிர்வாகத்தை பெண்கள் தான் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அது மனைவியாகவோ தாயாகவோ இருக்கலாம். இன்று நாட்டில் சாதாரண சம்பளம் பெறும் ஒரு ஊழியர் வாழ்க்கை செலவு இரு மடங்குகளாக அதிகரித்துள்ளது. அதனை ஈடு செய்வதற்காக மக்கள் அவர்களின் உணவு வேளைகளை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக பலர் இருவேளை உணவு அல்லது ஒரு சிலர் ஒருவேளை உணவை மாத்திரமே உட்கொள்கின்றனர்.

இன்று வீட்டு நிர்வாகத்தை கவனிக்கும் பெண்கள் மின்சாரத்தை பயன்படுத்துவதற்கும் நீரை பயன்படுத்துவதற்கும் அச்சப்படுகின்றனர். ஏனெனில் இவற்றின் சேவை கட்டணம் ஆசியாவின் ஆச்சரியமாக மாறியுள்ளது.

இன்று குடும்பத்தில் மூத்த பிள்ளை ஏதேனும் ஒரு தொழிலை செய்தால் தான் அடுத்த பிள்ளை பாடசாலைக்கு அனுப்ப முடியும் என்ற நிலைமை காணப்படுகின்றது. கிராமத்திலே பாடசாலைக்கு செல்லும் பிள்ளை காலையில் உணவாக வெறும் தேநீரை மாத்திரம் அருந்தி விட்டு செல்லும் நிலை காணப்படுகின்றது. இது ஒரு வகையில் சிறுவர் துன்புறுத்தல் ஆகும் என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது.

அத்தோடு நாளைய தினம் பிள்ளையை பாடசாலைக்கு எப்படி அனுப்புவது எவ்வாறு உணவைத் தேடிக் கொள்வது என்று யோசித்து பல தாய்மார்கள் நோயாளிகளாக மாறி இருக்கிறார்கள் இவர்களின் இந்த நிலைமைக்கு காரணமானவர்கள் யார் என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்கான தீர்ப்பை உயர் நீதிமன்றமும் வழங்கி இருக்கின்றது.

கடந்த ஆட்சிக்காலங்களில் ஆசியாவின் ஆச்சிரியம் என இலங்கையை விளம்பரப்படுத்தினார்கள். நாடு இன்று ஆசியாவின் ஆச்சரியமாக மாறவில்லை, மாறாக ஆட்சியாளர்களின் சொத்தாக மாறி இருக்கின்றது. வாழ்க்கைச் செலவு ஆச்சரியமாக மாறி இருக்கின்றது. நீர் கட்டணம் மின்கட்டணம் எரிபொருள் விலை ஆச்சரியமாக மாறியிருக்கிறது. இதுதான் இன்று ஆசியாவின் ஆச்சரியமாக காணப்படுகின்றது.

நாளைய தலைவர்களாக இன்றைய சிறுவர்களை பாடசாலைகள் வலுப்படுத்தி தயார்படுத்துவதற்கு முன்பள்ளி ஆரம்ப இடமாக காணப்படுகின்றது. இந்நிலையில் முன் பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். பல தியாகங்களை செய்து தமது சேவையை முன்னெடுக்கின்றனர். இவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு மிகவும் குறைவாக காணப்படுகின்றது. அவர்களுக்கு மாதாந்தம் 4000 வழங்கப்படுவதாக கூறப்படுகின்றது. என்றாலும் ஒவ்வொரு மாதமும் அது வழங்கப்படுவதில்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு முறையே அந்த பணம் வழங்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றது. இந்த கொடுப்பனவு மிகவும் குறைவானதாகும். எனவே இந்த குறைந்தபட்சம் 20,000 ரூபாவாகவாவது அதிகரிக்க வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று முன்பள்ளி ஆசிரியர்கள் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு திறந்த பல்கலைக்கழகங்களில் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் வலியுறுத்திக் கொள்கிறேன் - என்றார்.

# அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் மாபெரும் பட்டமளிப்பு விழா 2023

எதிர்வரும் 18.12.2023 பகல் 2:00 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு பிரதான மண்டபத்தில் வெகு விமர்சையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

120 Diploma மாணவர்கள், 50 HND மாணவர்கள் 150, பட்டதாரி மற்றும் முதுமாணி மாணவர்கள் விருதுகளை பெறுகின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக மதிப்பிற்குரிய கல்வி ராஜாங்க அமைச்சர் திரு. அரவிந்தகுமார் அவர்களும் மாலைதீவுகள் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் இலங்கை உயர்ஸ்தானியர்களும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கின்றனர்.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் இருந்தும் சுமார் ஐந்து பேராசிரியர்கள் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வைப்பதற்காக வருகை தருகின்றனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திரு சானக உதயக்குமார அமரசிங்க அவர்களும் விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்த உள்ளார்.

கல்லூரியின் 35 விரிவுரையாளர்களும் 20 ஊழியர்களும் இணைந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளனர்.

சிறந்த விரிவுரையாளர்களுக்கான விருதுகளும் சிறந்த இணை நிறுவனத்திற்கான விருதுகளும் இந்நிகழ்வில் வழங்கப்பட உள்ளது.

மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் உட்பட 1000 க்கும் அதிகமானோர் இந்நிகழ்ச்சியை அலங்கரிக்க உள்ளனர் என அமேசன் கல்லூரியின் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் அவர்கள் தெரிவித்தார்.

www.amazoncollege.lk

# வழமைக்குத் திரும்பும் பழமை



இர்பான் இக்பால்



சில காலங்கள் யுக்ரேன் – ரஷ்யா யுத்த செய்திகளோடு காலம் கழித்த செய்தி உலகம், அண்மைக்காலமாக பலஸ்தீன அழிப்பு நடவடிக்கைகளின் செய்திகளால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. நியாயம் எதுவென்று உலகறியும், அதன் வெளிப்பாடாகவே கடந்த 12ம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இஸ்ரேலிய நடவடிக்கைகளை நிராகரித்து உடனடி யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி வாக்களித்தது.

153 நாடுகள் இஸ்ரேலின் காட்டுமிராண்டி நடவடிக்கைகளை ஒன்றிணைந்து எதிஉக்க, வழமை போல் அமெரிக்கா இஸ்ரேலின் பக்கம் தோளோடு தோள் நின்றது. ஏன்? என்ற கேள்வியின் பதிலும் உலகறிந்தது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில், இஸ்ரேல் என்ற ஒரு நாடு இல்லையாயின் அதனை உருவாக்கும் தேவை இருக்கிறது என இப்போதைய அமெரிக்க ஜனாதிபதி, 2006ம் ஆண்டு தெரிவித்திருந்தார். மத்திய கிழக்கில், குறிப்பாக இஸ்லாமிய ஐக்கியம் நிலைபெறுவது எப்போதுமே தமக்கு ஆபத்தானது என அமெரிக்கா கருதுவது ஒன்றும் புதிதான விடயமுமில்லை. ஆயினும், எது முக்கியம் என்றால், அதற்காக கொடுக்கப்படும் உயிர்ப்பலிகளை பாஉத்துக் கொண்டு, உலகம் எத்தனை தூரம் மௌனித்து இருக்கப் போகிறது என்பது தான். அந்த வகையில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், உலக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கிறது என்று சொன்னால் மிகையில்லை. ஐக்கிய இராச்சியம் உட்பட சில முக்கிய நாடுகள் ஆதரவாகவும் இல்லாமல் எதிர்க்கவும் இல்லாமல் மௌனித்துக் கொண்டது.

இதன் தொடர்ச்சியில், இஸ்ரேல் உலகின் ஆதரவை இழந்து வருகிறது என பைடன் எச்சரிக்கவும் செய்து விட்டார். நிற்க, இந்த விடயத்தில் இலங்கை முஸ்லிம் சமூகமும் சமூக வலைத்தளங்களில் பெருமளவு துண்டாடப்பட்டு வருகிறது.

ஹமாஸ் அமைப்பினை ஆதரிப்பது, செய்திகளை பெருப்பித்துக் காட்டுவது மற்றும் அதனை எதிர்ப்பது அல்லது அதனால் ஏற்படும் மறுபக்க விளைவுகளை எடுத்துச் சொல்வது, இதனூடாக ஈற்றில் ஆளுக்காள் யூதன், ஷியா, வஹாபி என முத்திரை குத்திக் கொள்வது என துண்டான உணஉவுகளின் பிரதிபலிப்புகள் ஏராளம். இந்த சந்தடிகளின் வினைச் சுற்று பழமையானது என அறிந்தவர்கள் மௌனித்து இருப்பதே மேல் என அமைதி காக்கிறாஉகள். காரணம், இது இன்றைய பிரச்சினை, நாளை இந்த பிரச்சினைகளின் வடிவங்கள் மாறலாம் என்கிற தெளிவாகும். இதுவே வழமையும், ஒரு வகையில் பழமையும்.

இந்த சூழ்நிலைக்குள் அகப்படாத இலங்கையின் இன்னுமொரு கோணம், சந்தடியில்லாமல் மீண்டும் வழமைக்கும் – பழமைக்கும் திரும்பியுள்ளது. 15ம் திகதி வெள்ளிக்கிழமை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என எழுந்து – வீழ்ந்து, கடந்த தடவை கிடைக்கப்பெற்ற மக்கள் அங்கீகாரத்தினால் இன்னும் தவழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் கட்சி, மீண்டும் மஹிந்த ராஜபக்சவை தலைவராகத் தெரிவு செய்து கொண்டுள்ளது. இதுவும் ஆச்சரியப்படும் விடயமில்லை வழமையில்லை. ஏனெனில், மஹிந்த ராஜபக்சவின் பிரபலம் என்ற கயிறே அக்கட்சியின் வேராகும். ஆயினும், அதனைத் தாண்டிப் பாஉக்கையில், இலங்கையின் சிறிய – பெரிய கட்சிகளுக்கு இந்த பழமையின் வழமை மாறாதிருப்பது ஏன்? என்ற கேள்வியொரு புறமும், மக்களும் தம் பழமையான வழமைக்குத் திரும்பாமலிருக்கவா போகிறாஉகள்? ஏன்ற கேள்வியும் சேஉந்தே வருகிறது.

ஏன் திரும்பக் கூடாது? என்று யாரும் கேள்வி கேட்க முடியாது. ஏனெனில், சுதந்திர உலகில், அனைவருக்கும் தமது கருத்து மற்றும் அபிப்பிராய சுதந்திரம் இருக்கிறது. ஆதலால், ஏன் திரும்ப மாட்டார்கள் என்று கருத்துக் கூறுவதற்கும் யாருக்கும் தடையிருக்கப் போவதில்லை. எனினும், இவையெல்லாம் தாண்டிய ஏதோ ஒரு மாற்றத்தை அல்லது நவீனத்தை மக்களில் ஒரு தொகுதியினர் எதிஉபார்க்கத்தான் செய்கிறார்கள். ஆகையால், அந்த நவீனம் எது? என்ற கேள்வியை முன் வைப்பது தகும்.

உலகம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. சூரியனை முடிந்த அளவில் அண்மித்து ஆராய்வதற்கான மனித சமூகத்தின் முயற்சியிலே, அடைவின் இலக்கு மாறவில்லை ஆனால் காலத்துக்குக் காலம் 'அண்மையின்' வரைவிலக்கணம் மாறியுள்ளது. காரணம், மனித அறிவு மேம்பட்டு வருகிறது. ஆதலால் தான் நூற்றாண்டுகளுக்கு முன் கனவாக இருந்த விடயம் 2018ம் ஆண்டு ஓரளவு சாத்தியப்பட்டு, சூரியனை 3.9 மில்லியன் மைல் தூரத்தில் அண்மிக்கும் திறனோடு Parker Solar Probe விண்ணுக்குச் சென்றது. அது போலவே, இலங்கை சமூகம் தமது அரசியல் இலக்கின் அடைவினை தீஉமானித்துக் கொண்டால் அதை அண்மிக்கும் பயணத்தை இன்றில்லாவிடினும் இன்னொரு நூற்றாண்டு காலத்திலாவது சென்றடையும் என நம்பலாம்.

சிங்கப்பூரை முன்னேற்ற லீ குவான் யூவுக்கு 30 வருடங்கள் கூட எடுக்காத நிலையில், இலங்கைக்கு ஏன் நூற்றாண்டு காலம் தேவைப்படும் என்ற கேள்வி முன் வைக்கப்படுமேயானால், அதற்கான விடையை இன்னும் ஒரு கேள்வியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அதாவது, நாம் சிந்திக்க ஆரம்பித்து விட்டோமா? என்பதே அந்தக் கேள்வி. அவ்வாறே சிந்திக்க ஆரம்பித்திருந்தால், அதனை செயற்படுத்த ஆரம்பித்து விட்டோமா? என்ற கேள்வியும் தவிஉக்க முடியாதது. அவ்வாறே செயற்படுத்த ஆரம்பித்திருந்தால், எந்த அளவு முன்னேறியிருக்கிறோம்? முன்னேற்றத்தைத் தடுக்கும் தடைகள் என்ன? எனும் கேள்வியும் அவசியப்படுகிறது. இது எல்லாவற்றிற்குமான விடைகளே, இன்று நாம் உலக அரங்கில் எங்கு நிற்கிறோம்? அந்த இலக்கை நோக்கிய எமது பயணத்திற்கு தலைமை தாங்கும் சக்திகளை எவ்வாறு தெரிவு செய்கிறோம் என்பதையும் விளக்கும். இதனை ஒவ்வொரு தனி மனிதனும் தனக்குத் தானே கேட்டுக் கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் அதன் விடையும் தெரியும். ஆனாலும், அதை வெளியுலகில் பேச முடியாமல் தடுப்பது எது? என்று தேடினால், அடிப்படையில் மீண்டும் அரசியலும் – ஊழலும் விவாதப் பொருளாக அமைந்து விடும்.

நிற்க, தேர்தல் ஒன்று மீண்டும் நடாத்தப்பட்டால்.. அது பெரும்பாலும் ஜனாதிபதி தேஉதலாகவே அமையப் போகிறது என இன்றைய அரசியல் மேடையின் கணிப்புகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறே அது நடந்து விட்டாலும் கூட எவ்வாறான தெரிவுகள் மக்கள் முன் இருக்கப் போகின்றன? வெளிப்படையாகவே சொல்வதானால் ரணிலையும் மஹிந்தவையும் தவிர வேறு யாஉ தான் இருக்கப் போகிறாஉகள் என்ற கேள்விகள் எழும்.

ஏனெனில், நாம் இன்னும் ஆரம்பித்த இடத்தை விட்டு முன்னேற வில்லை. ஆகவே, அடுத்த தெரிவும் அறியப்பட்ட தனி நபஉ சாஉந்தும் அதன் பின் வரும் பொதுத் தேர்தல் அவர் சார்ந்த கட்சி சார்ந்தும் இருக்கப் போகிறது. விளைவு? புழமையை புதுப்பித்தலே திணிக்கப்பட்ட தெரிவாக இருக்கப் போகிறது.

அது அவ்வாறே இருக்க வேண்டும், இருக்கக் கூடாது என்பதும் வேறுபட்ட அபிப்பிராயங்கள், ஆனால் உலக அரங்கில் நாம் இன்னும் வெகுவாகப் பின் தள்ளி நிற்கிறோம் என்பது மாத்திரம் உண்மை. அடுத்தடுத்த வாரங்கள் உள்நாட்டு அரசியலுக்கு இன்னும் பல செய்திகளைத் தரும், அது மக்களுக்கு இன்னும் பல தெளிவுகளைத் தரும் என்றும் நம்புவோமாக!

# இலங்கையர்களுக்கு போலி கடவுச்சீட்டு வழங்கியது தொடர்பாக 6 பேர் கைது; காவல் நிலைய எழுத்தர் பணியிடை நீக்கம்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையர்களுக்கு போலி கடவுச்சீட்டு வழங்கியது தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, இதற்கு உடந்தையாக இருந்த காவல் நிலைய எழுத்தர் சேஷாவை தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பணியிடை நீக்கம் செய்து சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் பகுதியில் இருந்து,இலங்கை தமிழர்களுக்கு போலி ஆவணங்கள் மூலம்,கடவுச்சீட்டு தயாரித்து வினியோகம் செய்யப்பட்டு வருவதாக, தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின்பேரில், குற்றப்பிரிவு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவசங்கரன், ஆய்வாளர் பிரபாகரன் தலைமையிலான 10 பேர் கொண்ட குழுவினர் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் அருகே ஆண்டிக்காடு கிராம அஞ்சலகத்தில், பணியாற்றும் ஊழியர் கோவிந்தராஜ் (64), பட்டுக்கோட்டை ரயில்வே ஸ்டேஷன் பகுதியில் கும்பகோணத்தைச் சேர்ந்த வடிவேல்(52), ராஜமடத்தை சேர்ந்த சங்கர்(42) ஆகியோரிடம் போலி ஆவணங்கள் மூலம் பெறப்பட்ட கடவுச்சீட்டுகளை வினியோகம் செய்வதாக கிடைத்த தகவலின்படி, கடந்த 12 ஆம் தேதி கோவிந்தராஜ், வடிவேல் மற்றும் சங்கர் ஆகிய மூவரையும் போலீசார் மடக்கி பிடித்தனர்.

அப்போது, மூவரிடமும் போலீசார் நடத்திய விசாரணையில், தமிழகத்தில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு போலியாக ஆவணங்கள் தயாரித்து, அதை ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தும், உரிய போலீஸ் விசாரணை ஏதும் நடத்தாமல், அதற்கு ஒப்புதல் வழங்கியும், பாஸ்போர்ட் அலுவலகத்தில் உள்ள சிலரின் துணையோடு இந்திய அரசின் கடவுச்சீட்டு வழங்கியது தெரியவந்தது.

இதையடுத்து பாஸ்போர்ட் விவகாரத்தில் உடந்தையாக செயல்பட்ட சேதுபாவாசத்திரம் காவல் நிலையத்தில் தற்காலிக கணினி இயக்குபவரான பாலசிங்கம்(36), சேதுபாவாசத்திரம் பகுதியை சேர்ந்த ஓய்வுப்பெற்ற தபால்காரர் பக்ரூதீன், திருச்சி கல்கண்டார்கோட்டையைச் சேர்ந்த வைத்தியநாதன்(52), திருச்சி உறையூரைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் சுந்தர்ராஜ், கும்பகோணத்தை சேர்ந்த ராஜூ(31) ஆகியோருக்கு தொடர்பு இருப்பதாகவும், இவர்கள் போலியாக ஆவணங்கள் மூலம் 28 கடவுச்சீட்டுகளை தயாரித்து வினியோகம் செய்துள்ளதாக தெரியவந்தது.

இந்த கடவுச்சீட்டு மூலம் தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்கள், சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். இதற்காக பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெற்றுக் கொண்டு கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் இலங்கை தமிழரான சுந்தர்ராஜ், சேதுபாவாசத்திரம் பக்ருதீன் ஆகிய இருவரையும் போலீசார் தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்ட 6 பேரும் கடந்த 13 -ஆம் தேதி இரவு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

கோவிந்தராஜிடம் வடிவேல், சங்கர் இருவரும் கூறும் முகவரிக்கும் வரும் கடவுச்சீட்டை, தங்களிடம் கொடுக்க வேண்டும் என கூறி அவருக்கு கடவுச்சீட்டு ஒன்றுக்கு ரூ.ஆயிரம் பணத்தை கொடுத்துள்ளனர். கடவுச்சீட்டு போலியானது என்பது தெரிந்தும், பணத்தை பெற்றுக்கொண்டு கோவிந்தராஜ் கடவுச்சீட்டை வழங்கியுள்ளார்.

இலங்கை தமிழரான சுந்தர்ராஜ் போலியான ஆதார், வாக்காளர் அட்டை, பள்ளி மாற்று சான்றிதழ, உள்ளிட்ட போலிச் சான்றிதழ்களை தயாரித்து, கும்பகோணம் மகாமகக்குளம் அருகில் உள்ள சரண் பிரவுசிங் சென்டர் நடத்தி வரும் ராஜீ மூலம் ஆன்லைனில் பதிவு செய்து விண்ணப்பம் செய்துள்ளனர். கடவுச்சீட்டு அலுவலகத்தில் எப்படி ஆதாரை ஏமாற்றி மாற்றி பயன்படுத்தினார்கள் போன்றவை குறித்து விசாரணை நடந்து வருகிறது.

போலியான ஆவணங்கள் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசின் கடவுச்சீட்டு பெறுவதற்கு உறுதுணையாக செயல்பட்ட தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் காவல் நிலைய எழுத்தர் சேஷாவை தஞ்சை எஸ். பி ஆஷிஸ் ராவத் பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அங்கு பணியாற்றிய தனிப்பிரிவு காவலர் சச்சிதானந்தம் அந்த பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்

# கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 202ஆவது கொடியேற்ற விழா ஆரம்பமானது








(சர்ஜூன் லாபீர்)

நானிலம் போற்றும் நாகூர் நாயகம், கருணைக் கடல், குத்புல் மஜீத் ஹழ்றத் செய்யிதுனா மஹான் சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக அம்பாறை மாவட்டம்

கல்முனை மாநகர மக்களால் நடாத்திவரும்

கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹாவில் 202 வது கொடியேற்று விழா இன்று (14 ஆரம்பமானது.

கல்முனை முஹ்யித்தீன் ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எஸ். எம். ஏ . அஸீஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜூம்ஆப் பெரிய பள்ளிவாயலில் இருந்து புனித கொடியானது உலமாக்கள், பக்கீர் ஜமாஅத்தினர், நிருவாகிகள், ஊர்மக்கள் புடைசூழ தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாகச் சென்று கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது .

கொடியேற்று தினத்தில் இருந்து தொடர்ந்து 12 நாட்களுக்கும் பாதுஷா சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் (கத்தஸ ல்லாஹூ சிர்ரஹூல் அஸீஸ்) அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித றிபாஈ றாதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதோடு கொடியிறக்கு தினமான எதிர்வரும் டிசம்பர் 26 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன் அன்றைய தினம் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கிவைக்கப்படவுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்து பொது மக்கள் இவ் கொடியேற்ற விழாவை பார்வையிட வருகை தந்ததை காணமுடிந்தது.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி,கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.எச்.டி எம் எல் புத்திக,கல்முனை கடற்படை பொறுப்பதிகாரி தம்பிக ஏகனாயக்க, கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர்,கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை பிரதேச செயலக கணக்காளர் ஏ.எச். எம் அமீர் அலி,உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர்,கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.எம் றியாஸ்,எம். எச் கலிலுல் ரஹ்மான், உட்பட நாகூர் ஆண்டகை தர்ஹா சரிப் நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மொழி மற்றும் கலாசாரத்தினூடாக சுற்றாலாத் துறைக்கு புத்துணர்ச்சி தென்கிழக்குப் பல்கலையில் சர்வதேசக் கருத்தரங்கம்

(எம்மையெம் அஸ்ஹர்)



நிலைபேறான சுற்றுலா துறைக்கு மொழி மற்றும் கலாசாரம் எனும் தலைப்பில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீட மொழித்துறையின் ஏற்பாட்டில் கலை, கலாசார பீட கேட்போர் கூடத்தில் மொழித்துறை தலைவர் கலாநிதி ஏ.விக்ரமரெட்ன தலைமையில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், கேரளா,கொச்சின் விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஏ.எம்.எப்.அஸ்றப், கலாநிதி க. இரகுபரன், ந.சுபராஜ், ஆகியோர் ஆய்வு ரீதியிலான கருத்துக்களை முன்வைத்தனர்.

இக் கருத்தரங்கில் இலங்கைச் சூழலில் மொழி மற்றும் கலாசாரத்தினூடாக சுற்றுலா துறையை வளர்ப்பதிலுள்ள சாதகங்கள், சவால்கள் மற்றும் சாத்தியங்கள் என்பன காத்திரமான உரைகளாக முன் வைக்கப்பட்டன.

# ஏறாவூரில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு காசோலையும், விஷேட தேவையுடையோருக்கு சக்கர நாற்காலியும் வழங்கி வைப்பு



(எம்மையெம் அஸ்ஹர்)

ஏறாவூர் நகர பிரதேச செயலக பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் முயற்சியாளர்களுக்கு காசோலைகள் மற்றும் விசேட தேவை உடையவர்களுக்கு சக்கர நாற்காலிகள் என்பன மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவினால் வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் வழி காட்டலில் கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் குறித்த வேலைத்திட்டம் தொடர்பான நிகழ்வு ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிகாரா மௌஜூத் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 5 பயனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டதுடன் சுய தொழில் முயற்சியில் ஈடுபடும் 2 பெண்களுக்கு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கும் செயற்திட்டத்தின் அடிப்படையில் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் அலியார், ஏறாவூர் நகர சபை முன்னாள் தவிசாளர் நளீம், ஏறாவூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் நஜிமுதீன், முன்னாள் நகர சபை உறுப்பினர் நிசார், அஹமட் ஹாஜி, முன்னாள் அதிபர் சயீத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு





(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு என்ற முஸ்லிம்களின் கல்வி விடயங்களையும் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யுமுகமாக முன்னாள் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் அதிபர் கலாம் சென்ற ஷாபி மரிக்கார் 1964இல் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு எனும் அமைப்பினை ஆரம்பித்திருந்தார்.

அந்த அமைப்பு அவருக்கு பிறகு கலம் சென்ற பேராசிரியர் ஹூசைன் இஸ்மாயில் தலைமை வகித்தார் அவர் காலமானதையிட்டு அதன் பின்னர் தற்காலிகமாக ஓய்வு பெற்ற அதிபர் எம்.எம்.எம் றில்வான் அவர்கள் தலைமையில் தற்காலிகமாக இயங்கி வந்தது. கடந்த கோவிட் காரனமாக அதன் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்தன.

கடந்த வியாழக்கிழமை 07ஆம் திகதி இவ் அமைப்பின் நிர்வாக சபையின் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் கூட்ட மண்டபத்தில் மிகுதியான நிர்வாக சபையினர் ஒன்று கூடினார்கள். அத்துடன் புதிய இளம் கல்வியலாளர்களையும் இணைத்துக் கொண்டு இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புதிய தலைவராக றிஸ்லி மரிக்கார், அதிபர், கொழும்பு சாஹிரா கல்லூரி அவர்கள் தலைவராக தெரிவு செய்தனர் அத்துடன் பொதுச் செயலாளராக எம்.எம். றில்வான், ஓய்வு பெற்ற அதிபர், உப தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன், உப செயலாளர் எம். நஜிமுதீன் கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவின் பணிப்பாளர் மற்றும் பேராசிரியை பரினா, கலாநிதி நவாஸ்தீன்,கலாநிதி கரிம்தீன் ஆகியோர்களும் தற்காலிகமாக தெரிபு செய்யப்பட்டார்கள். அத்துடன் அமைப்பின் யாப்பின் படி சகல கல்வி திணைக்களம், வலய கல்விப் பணிப்பாளர்கள் மாவட்ட ரீதியில் அங்கத்துவம் பெறுவதற்காகவும் ஏனைய தெரிபுகளையும் மேற்கொள்வதற்கு புதிய தலைவர் தலைமையில் நிர்வாகக் கூட்டம் கூட்டப்படுவதாகவும் அத்துடன் 2024ல் கல்விமாட்டின் அமைப்பின் 60 வது ஆண்டு விழாவினை சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

இவ் அமைப்பினால் கடந்த காலத்தில் சாபி மரிக்கார் ஆற்றிய பணிகள் சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பிணர்களை அழைத்து முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைகள் கலந்துரையாடுவது மட்டும் அல்லாது இவ்விடயத்தினை பாராளுமன்றததில் உரையாற்றவதற்கும் வழிவகுத்து உரிய தகல்களைப் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பிணர்களுக்கு வழங்கினார். அடிக்கடி கல்வியமைச்சர்களை சந்தித்து முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடினார். இது போன்ற அவரது சமூக சேவைகள் ஞாகப்படுத்தப்பட்டன. அத்துடன் கலம் சென்ற பேராசிரியர் ஹூசைன் இஸ்மாயில், ஜெசீமா இஸ்மாயில் கலாநிதி ஹர்ஜான் மன்சூர், எஸ். எச்.எம். ஜெமீல் பேராசிரியர் எம். எஸ் அனஸ் ஆகியோர்கள் இணைந்து முஸ்லிம்களது கல்விப்பிரச்சினைகள் பற்றிய அறிக்கைகளை தயாரித்து அதனை அப்போதைய ஜனாதிபதியிடமும் கையளிக்கப்பட்டது.

# நீதி அமைச்சருடன் சர்வமத தலைவர்கள் விசேட கலந்துரையாடல்!



சர்வமத தலைவர்களான கௌரவ சாஸ்த்ரபதி கலாநிதி கலகம தம்மரன்சி நாயக தேரர், கலாநிதி சிவ ஸ்ரீ பாபுசர்மா குருக்கள், அஷ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி மற்றும் கலாநிதி கௌரவ நிஷான் குரே பாதிரியார் அண்மையில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் சந்தித்து சமய மற்றும் சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் (ONUR) சபையின் ஊடாக, நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.



பத்திரிகை ஆசிரியர் சங்கம் இலங்கை பத்திரிகை நிலையமும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் விருது வழங்கும் நிகழ்வில் மூத்த ஊடகவியலாளர் எம் ஏ எம் நிலாம் வாழ்நாள் சாதனை யாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்,படத்தில் வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன்,தினக்குரல் நிறுவன பொது முகாமையாளர் டாக்டர் கேசவராஜாவும் படத்தில் காணப்படுகின்றனர். (படம் – அஸ்ரப் ஏ சமத்)

# பேருவளை கெச்சிமலை தர்காவில் புனித புஹாரி தமாம் மஜ்லிஸ்





(பேருவளை பீ.எம் முக்தார்)

வரலாற்று பிரசித்தி பெற்ற பேருவளை கெச்சிமலை தர்ஹாவில் நடைபெற்று வரும் வருடாந்த புனித ஸஹீஹூல் புஹாரி, ஸஹீஹூல் முஸ்லிம் மற்றும் மஷ்ரவுர்ரவி ஆகிய ஹதீஸ் கிரந்தங்களின் பராயன மஜ்லிஸின் தமாம் வைபவம் எதிர் வரும் 17ஆம் திகதி (17.12.2023) ஞாயிற்றுக் கிழமை காலை சங்கைக்குறிய அஷ் ஷெய்ஹ் மௌலவி ஸக்கி அஹமத் (அஷ்ரபி) பின் அஷ் ஷெய் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இலங்கையில் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்த அராபிய நாட்டு முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றம் சரித்திரப்பிரசித்திபெற்ற பேருவளை கெச்சிமலை கடற்கரைப் பகுதியில் தான் இடம்பெற்றது என்பது பல சரித்திர ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கி.பி 11 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியர்கள் இலங்கையில் குடியேறி வாழ்ந்தார்கள். இன்றும் பேருவளை கடற்பாங்காவுள்ள கெச்சிமலைப் பள்ளிவாசல் இலங்கையில் முஸ்லிம்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு சான்றாகவுள்ளது என்றும் பட்டுப் பாதையூடாக பிரயானம் செய்த "ஆம்கோவேல்ட்" நிறுவனத்தின் பிரபல பத்திரிகையாளர்களான டேவிட், ஆம்டிட் குழுவினரின் ஆய்வறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது.

இறைநேசச் செல்வர்கள், நல்லோர்கள் வழியில் மக்களுக்கு அறிவுரை வழங்கி தாங்களும் வாழ்ந்து காட்டி மனித சமுதாய மறுமலர்ச்சிக்காக உழைத்தார்கள். இத்தகைய ஸூபியாக்கள் பலரும் இலங்கைக்கு வருகை தந்து பாவா ஆதம் (அலை) என்று அழைக்கப்படும் (யுனயஅ'ளீநயம) புனித தளத்தை தரிசித்து சென்ற வரலாற்று உள்ளது.

இப்னு பதூதா (Ibnu Bathootha) போன்ற வரலாற்று வல்லுனர்கள் சில்க்வழி (Silk Route) வந்து தரிசித்து தங்களது வரலாற்று நூ'லில் குறித்துள்ளது வியக்கத்தக்கது.

கெச்சிமலையில் அடங்கியுள்ள செய்னு அஷ்ரப் வழியுள்ளாஹ் அவர்கள் இதே நோக்கத்துதோடு தான் கப்பல் மூலமாக இலங்கை வந்தார்கள். கடலின் அகோரமும், காற்றின் யோகமும் கப்பலை திசை திருப்பி மெச்சுப் புகழ் கெச்சிமலை அன்மித்தே பேருவளையில் இறங்கச் செய்தது. அல்லாஹ்வின் நாட்டம் இதுவாக இருக்கலாம் என உணர்ந்த அல்லாஹிவின் அன்பர் அஷ்ரப் வழியுள்ளாஹ் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்கள். அங்கிருந்து இறைபணியைத் தொடர்ந்தார்கள். ஆத்மீக மலர்ச்சி கண்டார்கள்.

1882 ஜோஜ் அரசின் (the 6th king Gorge) இன் கவர்னராக இலங்கையில் கடமையாற்றிய சேர் ஆதர் ஹென்றி கோடன் (Sir Athar Henry Gorden) அவர்கள் காலிக்கு தன்னுடைய உத்தியோக கடமைக்காகச் செல்லும் வழியில் அவர் பயணம் செய்த குதிரை வழி தவறி பேருவளை சுங்கப் பாதை (Customs Road) வழியில் சென்று ஓர் இடத்தில் தறித்து நின்றது. அங்கு இருந்த ஒரு பழைய புதைகுழியின் அருகில் நின்று பணிந்து வணங்கியது.

இந்த ஆச்சரியமான சம்பவம் கவர்னரை சிந்திக்கச் செய்தது குதிரை அந்த இடத்தை விட்டும் அசைய மருத்தது. அங்குள்ள மக்களிடம் கவர்னர் விசாரித்ததில் இந்த இடம் கெச்சிமலை என்றும் அடங்கப்பட்டிருக்கும் அற்புதமான வழியுள்ளாஹ் பற்றியும் கூறப்பட்டது. உடனே கவர்னர் அவர்கள் தன்னுடைய காரியதரிசியிடம் ஜோஜ் அரசின் சார்பில் இந்த இடத்தை அன்பளிப்பாக வழங்கும்படி உத்தரவிட்டார்கள். பின்னர் மக்கள் ஒன்று சேர்ந்து கெச்சிமலை உருவாக்கினார்கள். இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பத்திரத்திற்கான ஆவணம் காலம்சென்ற சங்கைக்குறிய அஷ் ஷெய்ஹூ ஹம்ஸா பின் முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் அலவியதுல் காதிரி அவர்கள் வசம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

15 ஆம் நூற்றாண்டில் கி.பி 1474 எலெக்ஸ் ஸாண்டியாவில் அமைக்கப்பட்ட ஸூல்தானுல் அஷ்ரப் அல் கீதாயின் பள்ளிவாசலை போன்று கெச்சிமலை தர்ஹாவில் கலை அமைப்பு பெரிதும் ஒத்தியிருக்கின்றது. எனினும் அதன் உருவ அலங்காரங்களும், அலகிய மாடங்களும், கோபுரங்களும் இங்கு இல்லை.

# புலமைப் பரிசில் பரீட்சையில் மருதமுனை மாணவன் சாதனை



நடந்து முடிந்த 2023 ம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கல்முனை கல்வி வலய மருதமுனை கமு/கமு/ அல்- ஹம்றா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் டிஸ்னித் முஹம்மட் 174 அதி கூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைக்கும், தனது பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் மருதமுனையை சேர்ந்த யஹ்ஸர் அபான், பாத்திமா பஸ்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார். இம் மாணவன் பெற்ற புள்ளியானது மருதமுனை பாடசாலைகளில் மாணவர்களுக்கிடையில் பெறப்படட அதி கூடிய புள்ளியாகும்.



தமிழ்மணி, தாஜூல் உலூம், தேசத்தின் கண் மானா மக்கீன், "மலைமுகட்டில் முகிழ்ந்த வித்துவ தீபம்" என்ற தொனிப்பொருளில், தில்லை நடராஜா தலைமையில், கொழும்பு தமிழ்ச் சங்கத்தில், வெள்ளிக்கிழமை(8) மாலை, அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் பற்றி உரையாற்றினார்.அந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அதிதியாக கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

# அகதி முகாம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

**மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர். 6**

**ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவு உருவான பின்னணி**

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே பயணிக்கும்போது சுமார் 12 கிலோமீற்றர் தொலைதூரத்தில் அமைந்திருக்கிறது ஏறாவூர் நகரம்.

இந்த ஊர் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்களுடன் சுமார் 50 ஆயிரம் சனத்தொகையை தன்னகத்தே கொண்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் எல்ரீரீஈ (தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் - Liberation Tigers of the Tamil Eelam) ஏறாவூர் பொலிஸ் நிலையம் முற்றாக அழித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அங்கிருந்த தமிழ்ப் பொலிஸாரை விடுவித்த புலிகள் இயக்கத்தினர் முஸ்லிம், சிங்கள பொலிஸாரைச் சிறைப்பிடித்துச் சென்றனர். சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் அதிகளவு எண்ணிக்கையானோர் முஸ்லிம்கள்.

இது போன்றே சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்திலிருந்தும் பெருந்தொகையான முஸ்லிம் பொலிஸாரையும் சிங்களப் பொலிஸாரையும் புலிகள் இயக்கத்தினர் சிறைப்பிடித்தனர். அவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 600 பேர் ஆகும். அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி இன்றுவரையில் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல் எதுவுமில்லை. பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலையில் கஞ்சிகுடிச்சாறு எனும் காட்டுப் பகுதியில் அவர்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதாக பின்னாட்களில் தெரிவிக்கப்பட்டது.

ஏறாவூர் பொலிஸ் நிலையம் இல்லாமல் போனதோடு அங்கிருந்த பாதுகாப்பும் முற்றாகத் துடைத்தெறியப்பட்டது. இராணுவம், எஸ்.ரி.எஃப் என்று எந்த அரச படை முகாம்களும் ஏறாவூரில் இருக்கவில்லை.

1990ல் பொலிஸ் நிலையம் அழிக்கப்பட்ட கையோடு ஏறாவூர் பிரதேச சபை, வாசிகசாலை என்பன எல்ரீரீஈ இனராலும் அவர்கள் அழைத்து வந்த ஆதரவாளர்களான தமிழ் மக்களாலும் பட்டப்பகலில் சூறையாடப்பட்டு, பின்னர் முற்றாக தீவைத்து அழிக்கப்பட்டது.

மின்சாரம் நிரந்தரமாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. கிழக்கிலுள்ள ஏனைய முஸ்லிம் ஊர்களில் அட்டூழியம் செய்ததைப் போன்று புலிகள் இயக்கத்தினர் ஏறாவூரிலும் முஸ்லிம்களைக் கடத்துவதும் கொல்வதும் தொடர்ந்து கொண்டிருந்தது.

இதன் நோக்கம் அச்சுறுத்துவதன் மூலம் கிழக்கில் முஸ்லிம்களை, அவர்களது வாழ்விடங்களிலிருந்து விரட்டுவதாகும். கிழக்கில் தமது பின்னடைவுக்கு முஸ்லிம் ஊர்களே காரணமென்றும் முஸ்லிம் ஊர்களை மையமாகக் கொண்டே இராணுவம், பொலிஸ் முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் எல்ரீரீஈ இனர் கூறிவந்தனர். இது அவர்கள் தம் தோல்விகளை மறைக்க முஸ்லிம்கள் மீது இட்டுக்கட்டி பழி போட்ட கதைகளாகும்.

எனவே, ஏறாவூர் முஸ்லிம் நகரப் பிரதேசம் பாதுகாப்பு ஏதுமற்ற இடமாக இருந்தது.

1990 ஆகஸ்ட் படுகொலை

இவ்வாறிருக்கும் தறுவாயிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான முஸ்லிம் நகரமான காத்தான்குடியிலும் முஸ்லிம்கள் மீது எல்ரீரீஈ இனர் கூட்டுப் படுகொலைகளை மேற்கொண்டனர். இது முஸ்லிம்களை அப்பிரதேசங்களிலிருந்து இனச்சுத்திகரிப்புச் செய்து அவர்களை விரட்டியடிக்கும் நோக்கில் செய்யப்பட்டது.

1990 ஆகஸ்ட் 03ம் திகதி எவருமே எதிர்பார்த்திராத விதத்தில் புலிகள் இயக்கத்தினர் காத்தான்குடியிலுள்ள பள்ளிவாசல்களைத் தாக்கி அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 பேரைப் படுகொலை செய்தனர். உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இச்சம்பவம் ஏறாவூர்ப் பொதுமக்களைக் குலைநடுங்கச் செய்தது. எப்போது என்ன நடக்குமோ என்ற பதைபதைப்புடனும் அச்சத்துடனும் முஸ்லிம்கள் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலும் தூங்காமலேயே கழிந்த அந்த இரவுகள் பெரும் பயங்கரமாக இருந்தன.

அவ்வாறிருக்கும்போது 1990 ஆகஸ்ட் 11ம் திகதி இரவு 9 மணிக்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் புலிகள் இயக்கத்தினர் வாள்கள், கத்திகள், துப்பாக்கிகள், கையெறி குண்டுகள், கோடரிகளோடு ஏறாவூர் நகருக்குள் நுழைந்தார்கள்.

நிராயுதபாணிகளான அப்பாவி முஸ்லிம் பொதுமக்களைக் கண்டதுண்டமாகக் வெட்டியும் கொத்தியும் குத்தியும் அரிந்தும் கொலை செய்தார்கள்.

தப்பியோடியவர்களை அகப்பட்ட இடங்களிலெல்லாம் வெட்டியும் குத்தியும் எரித்தும் கொன்று தீர்த்தார்கள். வீடுகளில் புகுந்த புலிகள் இயக்கத்தினர் கர்ப்பிணிப் பெண் ஒருவரின் வயிற்றைக் கீறி சிசுவை எடுத்து அம்மிக் கல்லில் வைத்து அடித்துச் சிதைத்ததை நேரில் கண்டதாக சம்பவத்தில் பாதிக்கப்பட்டு தற்போதும் உயிருடனுள்ள உறவினர்கள் கூறுகிறார்கள்.

எதிர்ப்பட்டவற்றை அடித்து நொருக்கியும் தீவைத்தும் தொடர்ந்த அட்டூழியம் இரவு 11.00 மணி வரை நீடித்தது.

பொழுது புலரும் வரை ஊர் மக்கள் எவரும் தாக்குதல் நடந்த பகுதிக்குச் செல்லவில்லை. புலிகள் இயக்கத்தினர் எங்காவது மறைந்திருந்து தாக்கக் கூடுமென்ற அச்சமே இதற்குக் காரணம். அரைகுறை உயிரில் கிடந்தவர்கள் காப்பாற்றுவாரின்றி துடிதுடித்து இறந்தார்கள்.

மறுநாள் காலையில் காத்தான்குடியிலிருந்து உதவிக்கு வந்தவர்களுடன் சென்ற ஊர் மக்கள் கண்ட கோரக் காட்சிகள் வாழ்வில் என்றைக்குமே கண்களை விட்டு நீங்காது.

அங்குமிங்குமாகச் சிதறிச் சின்னாபின்னமாகிக் கிடந்த உடல்களைத் தேடி ஒன்று சேர்ப்பது பெரும்பாடாக இருந்தது. குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணிகள், நோயாளிகள், முதியவர்கள் பெண்கள், ஆண்கள், என்ற வேறுபாடின்றி புலிகள் இயக்கத்தினர் அனைவரையும் கொன்று குவித்திருந்தனர்.

ஏறாவூர் நகர், ஏறாவூர் ஆற்றங்கரைப் பிரதேசம், ஓட்டுப்பள்ளியடி, புன்னைக்குடா வீதி, சத்தாம் ஹு/ஸைன் கிராமம் போன்ற இடங்களில் மொத்தமாக 121 பேர் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டிருந்தனர். 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் பலர் சிகிச்சை பயனளிக்காமல் பின்னாட்களில் உயிரிழந்தனர். எஞ்சியவர்கள் நடைப்பிணங்களாக ஆகினர். இறந்தவர்களின் உடல்களைக் குளிப்பாட்டி அடக்கம் செய்யும்போது பின்னேரமானது. "சுஹதாக்கள் பூங்கா" எனப் பெயர் பொறிக்கப்பட்ட காட்டுப்பள்ளி மையவாடியின் புறம்பான பகுதியில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் நல்லடக்கம் செய்யப்பட்டனர்.

தமிழர் உரிமைப் போராட்டம் என்று கூறிக் கொண்ட ஆயுதம் ஏந்திய எல்ரீரீஈ, அமைப்பினரால் 1990ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூட்டு இனப்படுகொலையின் பின்னர் ஏறாவூர் மக்கள் தமது நிருவாக ரீதியான கருமங்களுக்காக ஊரை விட்டு வெளியேற முடியாத நிலைமை ஏற்பட்டது.

ஏற்கெனவே ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவுடன் ஏறாவூர் நகரிலுள்ள மக்களின் அரச நிருவாகக் கடமைகள் இடம்பெற்று வந்தன.

இருந்தபோதிலும் 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இன வன்முறைகளையும் முஸ்லிம்கள் மீதான கூட்டுப் படுகொலைகளையும் தொடர்ந்து ஏறாவூர்ப் பகுதி திறந்தவெளி அகதி முகாம்போல இருந்தது.

அங்கிருந்து வெளியில் நகரமுடியாத உயிரச்சுறுத்தல் இருந்ததால் ஏறாவூர் நகர மக்கள் அரச நிருவாகக் கடமைகளுக்காக ஏறாவூரிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றருக்கும் குறைவான தூரத்தில் செங்கலடியில் அமைந்திருக்கும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குச் செல்ல முடியாமற் போனது.

இந்த சூழ்நிலையில்தான் ஏறாவூர் நகர பிரதேச முஸ்லிம் மக்கள் அரச சேவைகளைப் பெறும் பொருட்டு 1990ஆம் ஆண்டு தனியான மேலதிக உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஏறாவூரில் மேலதிக உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இயங்கத் தொடங்கியது.

மேலதிக உதவி அரசாங்க அதிபராக யூ.எல்.எம். ஹனீபா 1990.08.22ல் நியமிக்கப்பட்டார். தளவாடங்கள் ஆளணி எதுவுமின்றி 13 கிராம உத்தியோகத்தர்களுடன் ஏறாவூர் மேலதிக உதவி அரசாங்க அதிபர் காரியாலயப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலதிக உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் ஏறாவூர் பிரதான வீதியில் அல்ஹாஜ். பீ.எம். மீராசாஹிபு, அல்ஹாஜ். பீ.எம். அப்துல் மஜீது சகோதரர்களுக்குச் சொந்தமான இரண்டு கடைகளில் திறந்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் நிர்வாகத்தை பரவலாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏறாவூர் நகர பிரதேச செயலகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் ஏ.ஈ. அமரதுங்கவினால் 1993.11.04 காலை 10.00 மணிக்கு விமரிசையாகத் திறந்து வைக்கப்பட்டது. கே. விமலநாதன் ஏறாவூர் நகர பிரதேச செயலாளராக 1993.08.26ல் கடமையைப் பொறுப்பேற்றார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஏறாவூர் நகர் பிரதேச செயலகப் பிரிவு 1993.01.01ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 1998.06.12ஆம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகக் குறைந்தளவு நிலப்பரப்பையும், மிகக்கூடிய சனத்தொகை அடர்த்தியையும் கொண்ட ஒரு பிரதேசமாக ஏறாவூர் நகர பிரதேசம் விளங்குகின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் சுமார் 2633.10 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டிருக்கின்றபோதும் ஏறாவூர் நகர் பிரதேச செயலக பிரிவு வெறும் 3.745 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை அதாவது மாவட்டத்தில் 0.14 சதவீத நிலப்பரப்பை மட்டுமே கொண்டுள்ளது.

ஏறாவூரில் வாழும் ஒரு குடும்பம் 0.000304 சதுர கிலோமீட்டர் நிலத்தை மட்டுமே கொண்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் உள்ளபடி ஏறாவூரில் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 7785 பேர் என்று காணப்படும் அதேவேளை மாவட்டத்தின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 236 பேர் என்றவாறு உள்ளது.

மேலும் 2021ஆம் ஆண்டு திரட்டப்பட்ட விவரங்களின்படி ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 2373 குடும்பங்கள் குடியிருப்பதற்கு ஒரு அங்குலக் காணிகூட இல்லாதோராக நிர்க்கதி நிலையில் உள்ளதாக ஏறாவூர் நகர பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எம். ஹன்சுல் சிஹானா தெரிவிக்கிறார்.

இதேவேளை ஏறாவூர் நகரைச் சூழ்ந்திருக்கும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவு 634.16 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இது மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பிரப்பில் 24.08 சதவீதமாகும். அதேவேளை இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஒரு சதவீதமாகும். அப்பிரதேச செயலகப் பிரிவில் சனத்தொகை அடர்த்தி 2020இல் உள்ளபடி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 148 பேர் என்றவாறு உள்ளது.

மேலும் இதனடிப்படையில் நோக்கினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகூடிய நிலப்பரப்பைக் கொண்ட பிரதேச செயலகப் பிரிவாக ஏறாவூர்ப்பற்று உள்ளது.

ஏறாவூரில் குறுகிய நிலப்பரப்பில் கூடுதலான மக்கள் செறிந்து வாழ்ந்து வருவதால் சுகாதாரம், இருப்பிடம் ஏனைய அரச வசதி வாய்ப்புகள் தொடர்பில் அநேகமான பிரச்சினைகளை ஏறாவூர் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

ஏறாவூரில் அரச கட்டிடங்களை அமைப்பதற்குக் காணித்துண்டொன்று இல்லாதிருப்பது பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

ஏறாவூர் மற்றும் ஏறாவூர்பற்று பிரதேச மக்களுக்குச் சேவையாற்றும் ஏறாவூர் பொலிஸ் நிலையம்கூட கடந்த 31 வருடங்களாக தனியாருக்குச் சொந்தமான கட்டிடம் ஒன்றிலேயே ஏறாவூரில் இயங்கி வருகின்றது.

ஏறாவூர் தபாற்கந்தோர் தனியாருக்குச் சொந்தமான கடைத்தொகுதி ஒன்றினை சுவீகரித்து அமைக்கப்பட்டது.

தற்போதுள்ள ஏறாவூர் நகர பிரதேச செயலகம் கூட வாவியை அண்டியுள்ள சதுப்பு நிலப்பகுதியில் இயற்கையாக நீர் வழிந்தோடக்கூடிய தனியாருக்குச் சொந்தமான சதுப்பு நிலத்தை செயற்கையாக மண் இட்டு நிரப்பியே அமைக்கப்பட்டிருக்கின்றது. இதனால் அப்பிரதேச செயலகத்தை வருடாந்தம் மாரிகால வெள்ளம் சூழ்ந்து கொள்கின்றது.

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.. வரும் வாரமும் வரும்)



# மாத்தறை - யாழ்ப்பாண ஒத்துழைப்பு ஊக்குவிப்பு வேலைத் திட்டத்திற்கான குழு புத்தளம் விஜயம்




நீதி அமைச்சின் தேசிய நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், மாத்தறை மாவட்டச் செயலகம், புத்தளம் பெரிய பள்ளிவாசல், புத்தளம் மாவட்ட சர்வமதக் குழு ஆகியன இணைந்து இந்த கலாச்சார மற்றும் சர்வமத நல்லிணக்கம் தொடர்பான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

அதன்படி, புத்தளம் பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், புத்தளம் மாவட்ட செயலாளர், எச்.எம்.எஸ். பி ஹேரத், புத்தளம் மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஸ்ஷெய்க் அப்துல்லா மஹ்மூத் ஆலிம், புத்தளம் சர்வமதக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் புத்தியகம ரத்தன தேரர், தம்ம குசல தேரர் இறைவன், சிவஸ்ரீ சுந்தரராம குருக்கள், அருட்தந்தை யோஹான் மற்றும் அஷ், முஜீப் சாலிஹ் உள்ளிட்ட உறுப்பினர்கள் அன்புடன் வரவேற்றனர்.

இந்நிகழ்வில் ரம்யா லங்காவின் பணிப்பாளர் அலி சப்ரி வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டமான இந்நிகழ்வில் புத்தளம் நகரை அண்மித்த பிரதேச உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட மற்றும் பல முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாவட்ட சர்வமதக் குழு சார்பாக திருமதி முஸ்னியா உவைஸ் சிறு உரையொன்றை நிகழ்த்தினார். அதன் பின்னர் புத்தளம் மாவட்ட செயலாளர், எச்.எம்.எஸ்.பி.ஹேரத் மற்றும் மாத்தறை மாவட்ட செயலாளர்,வை.விக்ரம ஸ்ரீ ஆகியோரின் உரை இடம்பெற்றது.

மாத்தறை மற்றும் புத்தளம் பிரதேசங்களுக்கு இடையிலான குறிப்பிடத்தக்க நல்லிணக்கமும் சகவாழ்வும் நாட்டிற்கு முன்னுதாரணமாக அமையும் என தெரிவித்த அவர்கள், இவ்வாறான பயணங்களின் ஊடாக சமூகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து மாத்தறை மாவட்ட செயலாளருக்கு மரியாதை செலுத்தும் வகையில் பொன்னாடை அணிவிக்கப்பட்டதுடன், அங்கிருந்த சர்வமதக் குழு உத்தியோகத்தர்கள் நினைவுப்பரிசில்களை வழங்கினர்.

வருகை தந்த குழுவினர் புத்தளம் பெரிய பள்ளிவாசல் வளாகத்தை சுற்றிப் பார்த்துடன் அங்கு மேற்கொள்ளப்படும் அன்றாட சமய சடங்குகள் குறித்தும் அறிந்து கொண்ட கொண்டனர்.

# 100 இளைஞர் அமைப்புக்கள் தலதா மாளிகையிலிருந்து நல்லூர் பயணம்

(ஏ.எச்.ஏ. ஹூஸைன்)

நாடு முழுவதும் உள்ள 100 இளைஞர் அமைப்புக்கள் சமாதானத்தின் செய்தியை தலதா மாளிகையிலிருந்து நல்லூர் நோக்கி எடுத்துச் செல்லும் பயணம்.

சர்வமத தலைவர்களின் உயர்ந்தபட்ச ஆதரவுடன் ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் உள்ளிட்ட 100 இளைஞர்கள் அமைப்புக்கள் கண்டி தலதா மாளிகை தொடக்கம் நல்லூ ர் கந்தசாமி கோவில் வரை உள்ள அனைத்து சர்வமத தலைவர்களுக்கும் சமாதானத்தின் செய்தி மற்றும் கோரிக்கைகளை முன்வைத்து திங்கட்கிழமை (04) கண்டி தலதா மாளிகை மற்றும் கண்டி ஸ்ரீ நாட்ட தேவாலத்திற்கருகாமையில் ஆரம்பமானது.

சயோமோபாலிக மகா நிகாய அஸ்கிரிய மகா விகாரை பிரிவினரின் ராஜ பூஜித விங்சத் வர்கிக காரக சங்க சபிக கலாநிதி வணக்கத்திற்குரிய கெட்டகும்பரே தம்மாராம தேரரின் பங்குபற்றலுடன் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பின்னர் கண்டி கணதேவி கோவிலின் நம்பிக்கையாளர் சபை மாவில்மட இந்து கோவிலின் குருக்கள் ஆகியோருக்கு இம்முன்மொழிவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அடுத்து மாவில்மட ஜ/ம்மா பள்ளிவாசல் மௌலவி உட்பட நம்பிக்கையாளர் சபையை சந்திக்க சென்ற இவ்விளைஞர்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டிருந்தது.

சமாதானத்தின் செய்தியை பாதுகாக்க தாம் செயற்படுவதாக உறுதியளித்த அவர்கள் இளைஞர்களின் இம்முயற்சி காலத்தின் தேவையாக அமைவதாக தெரிவித்தார். சர்வ மதத் தலைவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

உடரட்ட அமரபுர நிகாய மல்வத்து பிரிவின் அனுநாயக்க அலவத்துகொட கொனகலகல ஸ்ரீ சத்தானந்த மகா பிரிவேனா பரிவனாதிபதி வணக்கத்திற்குரிய கொனகலகல உதித தேரர் அனைத்து மதங்களையும் சேர்ந்த இளைஞர்கள் சமாதானத்தின் செய்தியை முன்னெடுக்க எடுக்கும் செயற்பாட்டை பாராட்டியதுடன் அடுத்த வருடம் தேர்தல்கள் நடைபெறும் வருடமாக அமைவதால் அரசியல் இலாபங்களுக்கு இனவாதத்தை பயன்படுத்தும் செயற்பாடுகளுக்கு இளைஞர்களிடம் சந்தர்ப்பம் வழங்க வேண்டாம் என இதன்போது கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் மாத்தளை கொன்கஹவெல ஜூம்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை மற்றும் மௌலவியை சந்தித்த இக்குழு மாத்தளை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அலுவிகாரை விகாரையின் விகாராதிபதியை சந்தித்ததுடன் அதனை தொடர்ந்து சீயம் நிகாய ரங்கிரி தம்புளு பிரிவின் மகாநாயக்க தேரர் இனாமலுவே சிறீ சுமங்கல தேரரை சந்தித்தனர்.

அதனை தொடர்ந்து மிகிந்தலை ரஜமகா விகாரையின் விகாராதிபதி வலஹாஹெங்குனவெவ தம்மரத்ன தேரரை சந்தித்த இவர்களின் இச் செயற்பாட்டை தேரர் நீண்ட அறிவுரைகளை வழங்கியதுடன் இவ்வாக்கபூர்வமான செயற்பாட்டுக்கு தனது ஆசீர்வாதம் மற்றும் ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து அனுராதபுரம் அட்ட மஸ்தான ருவன்வெலிசாயவின் விகாராதிபதி வணக்கத்திற்குரிய ஈத்தல்வெட்டுன வெவ ஞானதிலக்க தேரர் அவர்களை சந்தித்து முன்மொழிவை வழங்கியதுடன் அதனை மேலும் விருத்தி செய்ய தேவையான முக்கியமான ஆலோசனைகளை இதன்போது வழங்கினார்.

# பேருவளை முஹம்மத் இஸ்பான் உவைஸ் சட்டத் தரணியாக சத்தியப் பிரமாணம்

(பேருவளை பீ.எம் முக்தார்)




பேருவளை மருதானை பாக்கிர் மாக்கார் எவனியுவை சேர்ந்த முஹம்மத் உவைஸ் மொஹம்மத் இஸ்பான் உவைஸ் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத் தரணியாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர்களான பீ. பத்மசூரசேன , எப் ஏ.ஜீ.ஆர் அமரசேகர ஆகியோர் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சத்தியபிரமானம் செய்யும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி இம்தியாஸ் பாக்கிர் மாகார் நீதிமன்ற வளாகத்திற்கு சமுகமளித்து தனது வாழ்த்துக் களையும் நல்லாசி களையும் தெரிவித்துக் கொண்டார்.

பேருவளை மருதானை பகுதியைச் சேர்ந்த பிரபல இரத்தினக்கல் வர்த்தகரான முஹம்மத் ஸஹீத் ஹாஜியார் முஹம்மத் உவைஸ் ஹாஜியார் மற்றும் பாத்திமா முபஷ்ஷிரா ஆகியோரின் புதல்வரும் பெல்மடுல்லை பிரபல வர்த்தகர் மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.எல்.பி பக்கீர் முஹம்மத் ஹாஜியானி மர்ஹூமா குறைசியா உம்மா மற்றும் கொழும்பு பொரளை பிரபல வர்த்தகர் மர்ஹூம் அல்ஹாஜ் யூ.எல்.எம் ஸஹீட் மர்ஹூமா ஹாஜியானி ரய்ஹானதும்மா ஆகியோரின் பேரப்பிள்ளையும் ஆவார்.

1997.12.02 பிறந்த சட்டத்தரணி இஸ்பான் உவைஸ் பேருவளை ஹெர்ரோவ் சர்வதேச பாடசாலை மற்றும் பாணந்துறை லைஸியம் சர்வதேச பாடசாலை ஆகியவற்றில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற அவர் கேம்ப்பிரிஜ் கல்லூரின் ஊடாக க.பொ.த சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த பின்னர் எல்.எல்.பீ (டிங்ரி) பட்டப்படிப்பிற்காக எபிட் (யிவைை) தனியார் கல்லூரியில் இணைந்தார்.

2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அவர் அங்கு தனது கல்வியை தொடர்ந்தார். பின்னர் 2021 ஆம் ஆண்டு இலங்கை சட்டக் கல்லூரியில் இணைந்தார். 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து சட்டத்தரணியானார்.

பாடசாலையில் கல்வி கற்கும் போது உதைப்பந்தாட்ட அணியில் இணைந்து பல போட்டிகளில் வெற்றி பெற்று கல்லூரிக்கு புகழ் சேர்த்தார்.

சட்டத்தரணி பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் கொழும்பில் சிரேஷ்ட சட்டத்தரணி முர்சித் மஹ்ரூபிடம் சட்டத்துறை தொடர்பில் பயிற்சியை பெற்றுக் கொண்டார்.

அத்தோடு சீனன் கோட்டையை சேர்ந்த மூத்த சட்டத்தரணி அல் ஹாஜ் எம்.ஸீ.எம் ஹம்ஸாவிடம் அடிக்கடி சட்டத்துறை தொடர்பில் பல ஆலோசனைகளை பெற்றுக் கொண்டார்.

எனக்கு கல்வி போதனை வழங்கி இந்நிலைக்கு வருவதற்கு கல்விப்போதனை வழங்கி உட்சாகமூட்டிய பேருவளை ஹெர்ரோவ் சர்வதேச பாடசாலை மற்றும் பாணந்துறை லைஸியம் சர்வதேச பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கும் மற்றும் சிங்கள மொழி மூலம் கல்வி போதனை வழங்கிய நீர்ப்பாசன திணைக்கள பொறியியல் உதவியாளர் அப்துல் ஜெலீல் முஹம்மத் ராஜி அவரது புதல்வர் அமீர் சுஹைல் மற்றும் எபிட் தனியார் கல்லூரி இலங்கை சட்டக் கல்லூரி ஆகியவற்றின் போதனை ஆசிரியர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிப்பாக சட்டத்தரணி இஸ்பான் உவைஸ் தெரிவித்தார்.

பேருவளை மருதானை அராபியர் முதலாவதாக காலடி எடுத்து வைத்த பூமியாகும். இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான (1100 ஆண்டுகள் பழமை மிகு) மஸ்ஜிதுல் அப்ரார் மற்றும் இலங்கை முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியான அல் பாஸிய்யதுல் நஸ்ரியா மகளிர் கல்லூரி ஆகியன அமையப் பெற்றுள்ளதும் இவ்வூரிலாகும்.

சட்டத்துறையில் வல்லுனர்களாக இருந்து இந்த மண்ணுக்கு புகழ் சேர்த்த பலர் உள்ளனர். அவர்களுல் முன்னால் சபாநாயகர், இலங்கையின் முதலாவது முஸ்லிம் ஆளுனர் தேசமானிய சட்டத்தரணி மர்ஹூம் அல் ஹாஜ் பாக்கிர் மாக்கார், முன்னால் நகர பிதா சட்டத்தரணி மர்ஹூம் ஏ.டப்லியு.எம் ராஸிக் மரிக்கார், அதேபோல் தற்போது சட்டத்துறையில் இவ்வூருக்கு மேலும் புகழ் சேர்க்கும் முன்னால் வக்ஃப் சபை தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.எம் ஹனபி , பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் , நீதியரசர் அல்ஹாஜ் அஹ்ஸன் மரிக்கார் ஆகியோராவார்.

அந்த வரிசையில் இளம் சட்டத்தரணியான நாமிக் நபாத் சட்டத்தரணியாக பணி புரியும் நிலையில் புதிய சட்டத்தரணி இஸ்பான் உவைஸ் இப் பணியில் இணைந்துள்ளார்.

# ஒளிராத வீதி சமிக்ஞை விளக்கும் ஆபத்தை எதிர்நோக்கும் மாணவர்களும்



(எம்.பஹத் ஜுனைட்)

கிழக்கிலங்கையில் மிகப்பெரிய வர்த்தக கேந்திரங்களில் ஒன்று காத்தான்குடி அதையும் தாண்டி குறைந்த நிலபரப்பில் அதிகமான மக்கள் வாழும் ஒரு நகரம்.

இந் நகரத்தின் முக்கிய போக்குவரத்து மற்றும் வியாபார போக்குவரத்து உள்ளூர் மக்கள் மட்டுமல்லாது முழு மாவட்ட மக்களும் பயன்படுத்துவது நகரத்தின் மத்தியில் உள்ள பிரதான வீதி இப்பிரதான வீதியில் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக இரு முக்கிய இடங்களில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் பாதுகாப்பாக வீதியை கடக்க டெலிகாம் சந்தியில் அந் நாஸர் வித்தியாலயம் முன்பாக பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்கு பொருத்திய காலத்தில் இருந்து இயங்காமலே இருக்கிறது.

மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்பட வேண்டிய வீதிக் கடவை சமிக்ஞை விளக்கு இயங்காமல் இருப்பதால் வீதிக் கடவை ஊடாக வீதியை கடக்க முற்படும் மாணவர், பாதசாரிகள் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் ஏன் உரிய அதிகாரிகள் இதுவரை கவனத்தில் எடுக்கவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளே.! இது உங்களின் கவனத்திற்கு.!

துரிதமாக இவ் சமிக்ஞை விளக்கை ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை சமூகம் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மாணவி சஜீஹா கம்பஹா மாவட்டத்தில் முதலாம் இடம்

(ஐ.ஏ. காதிர் கான்)



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில், திஹாரிய - தாருஸ்ஸலாம் ஆரம்பப் பாடசாலை மாணவி எம். ஆர். சஜீஹா 186 புள்ளிகளைப் பெற்று, கம்பஹா மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர், நாம்புலுவ பஸ்யால பாபுஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் ரீ.எம். ரிம்ஸான் - திஹாரிய, அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் ஆசிரியை என்.எச். சுரையா ஆகியோரின் புதல்வியுமாவார்.

## மனநலமும் ஆலோசனையும் 10

# மணவாழ்வில் தொடர்பாடல்

எந்தவொரு வெற்றிகரமான மணஉறவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பது அழகான தொடர்பு. தங்கள் உறவில் திருப்தி அடைந்த தம்பதிகள் ஒருவருக்கொருவர் நேர்மறையான உரையாடல்களில் ஈடுபடுகிறார்கள். இது இருவருக்கும் இடையே பலமான புரிதலை ஏற்படுத்தி மணவாழ்வை மகிழ்ச்சியானதாக ஆகிவிடும். அதேவேளை மோசமான தொடர்பு விவாகரத்துக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கணவன் மனைவி தொடர்பு என்பது ஆரோக்கியமான உறவுக்கான முதல் படியாகும்.

கணவன் மனைவி தொடர்பு கொள்ளாமல் இருப்பது சாத்தியமில்லை.

அழகான முறையில் தொடர்பு கொள்வது மணவாழ்வு வெற்றியின் ஒரு தூணாக இருக்கிறது. ஏனென்றால் கணவன் மனைவியின் எல்லா நடத்தைகளும் ஒரு வகையான தொடர்பாகவே வெளிவருகின்றன. நல்ல தொடர்பாடல் சிறந்த புரிதலுக்கு வழிவகுக்கிறது. சிறந்த புரிதல் சீறிய வாழ்வுக்கு வழிவகுக்கிறது. தொடர்புகொள்ளல் என்பது கணவன் மனைவியிடம் இருக்க வேண்டிய ஒரு திறனாகும். இல்லையெனில் கட்டாயம் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறனாகும்.

திருமணத்தொடர்பு ஏனைய தொடர்புகளை விட வித்தியாசமானதாகவும் வலுவானதாகவும் இருக்க வேண்டும். சரியான தொடர்பாடல் சட்டென்று உருவாகுவதில்லை. நாம்

எவரும் இயற்கையான தொடர்பாளர்களாக பிறக்கவுமில்லை. நாம் வளர வளர பல திறன்களை வளர்த்துக் கொள்வது போன்று தொடர்புகொள்ளும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறோம். திருமண தொடர்பு என்பது நாங்கள் கற்றுக்கொள்ள முடியுமானதும் வளர்த்துக் கொள்ள வேண்டியதுமான திறன். நல்ல தொடர்பு தம்பதிகள் உறவை மேம்படுத்துவதற்கான திறவுகோலாகும்.

தம்பதிகள் அடிக்கடி ஒருவருக்கு ஒருவர் பேசுவது, தங்கள் வாழ்க்கையைப் பற்றி கலந்துரையாடுவது ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் வலுவான பிணைப்பைப் பெறவும் உதவுகிறது.

திருமண உறவில் தொடர்பு என்பது நதி போன்றது. திருமணத் துணைவர்களிடையே எண்ணங்களும் உணர்வுகளும் சீராகப் பாயும் போது அது மகிழ்ச்சியாகவும், பார்பதற்கு இனிமையாகவும் இருக்கும், மேலும் சுற்றியுள்ள அனைவருக்கும் பயனுள்ளதாகவும் ஆதரவளிக்கக்கூடியதாகவும் இருக்கும். திருமண தொடர்பின் ஓட்டம் கலங்கியதாகவும் வேகமாகவும் இருக்கும்போது, அது ஆபத்தானதாக ஆகிவிடும். அவ்வாறே தொடர்பு தடைபடும் போது மனதுக்குள் அழுத்தம் கூடி வார்த்தைகள் ஓடத் தொடங்கும் போது பொங்கி எழும் வெள்ளம் போன்று திடீரென்று சீற்றம் பெற்று பாரிய அழிவுகளை ஏற்படுத்திவிடும்.

பல திருமணமான தம்பதிகளுக்கு இடையே ஆரோக்கியமான தொடர்புகள் இல்லாததால் அவர்களுக்கிடையே இயல்பாகவே உள்ள ஆர்வத்தையும் அன்பையும் இலகுவாக இழந்து விடுகிறார்கள்.

சிறந்த திருமண தொடர்பு எப்படி இருக்க வேண்டும் என்று நாம் கேட்கலாம்.

- ஒரு சிறந்த கணவன் மனைவி உறவில், தம்பதிகள் இருவரும் சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் பேசுவார்கள்,
- தங்கள் தனிப்பட்ட எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியை உணர்வார்கள்.
- சிரமங்கள் ஏற்படும் போது அவர்கள் அக்கறையுடன் தங்கள் கவலைகள் மற்றும் உணர்வுகளை வாய்மொழியாக பேசுவார்கள்
- நேர்மறையான எண்ணங்களுக்கும் கருத்துக்களுக்கும் செவிசாய்ப்பார்கள்.
- இருவரும் சாதுரியமாகப் பேசுவார்கள்
- ஒருவர் மற்றவரின் கருத்துக்களைக் கட்டுப்படுத்துவதில் இருந்து வெகு தொலைவில் இருப்பார்கள்.
- அவர்கள் இருவரும் வேறுபட்ட கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தாலும், தங்கள் பங்குதாரர் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது என்பதைத் தேடுவதை விட தங்கள் பங்குதாரர் சொல்வதை அனுதாபத்துடன் புரிந்து கொள்ள முயற்சி செய்வார்கள்.
- விடயங்களை பேசி முடித்த பிறகு, பேசிய விடயங்களின் உள்ளடக்கத்தை நன்றாக உணர்வார்கள்.
- அவர்கள் முன்வைத்த விடயங்கள் நன்கு புரியப்பட்டதாக உணர்வார்கள்.
- சிறிய விடயங்களைப் பற்றியோ பெரிய பிரச்சினைகளைப் பற்றியோ ஒருவருக்கொருவர் பேசுவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்திருப் பார்கள்.

இந்த விடயங்கள் எல்லாம் எவ்வளவு அழகானவை என்பதை நாம் புரிந்து கொண்டிப்போம். இவையெல்லாம் சிறந்த தொடர்பின் வெளிப்பாடுகள். இவற்றை நாம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு பயிற்சி தேவை. காலம் தேவை.

ஆனால் அவசரம் கூடாது. ஆவேசம் கூடாது.

நல்ல செயல்களின் வெற்றியை காண காலமும் பொறுமையும் அர்ப்பணிப்பும் வேண்டும்.

அழகான ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ விரும்பும் கணவனுமா மனைவியும் இருவருக்கும் இடையே சிறந்த தொடர்பை வளர்க்க ஆசையோடும் ஆர்வத்தோடும் முயற்சி செய்ய வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**



இலங்கை வந்துள்ள புலம்பெயர் தமிழ் அமைப்பின் பிரதிநிதிகள் முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

# கல்லொழுவை அல் அமானில் 42 மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி

(ஐ.ஏ. காதிர் கான்)

*அண்மையில் 2022 (2023) வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மினுவாங்கொடை - கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 55 மாணவர்களில் 42 பேர் (76.36 வீதமானோர்), உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக, அதிபர் எம். ரீ.எம். ஆஸிம் தெரிவித்துள்ளார்.*

*இம்மாணவர்களில், பாயிமா அனஸ் - 8ஏ 1பீ, எம்.ஆர். எம். அஸ்ஜத் - 5ஏ 2பீ 2சீ, ஏ.எஸ்.எப். ஸைனப் - 4ஏ 3பீ 2சீ, எம்.கே.எப். ஸபீயா - 4ஏ 2பீ 3சீ, எம்.ஏ.எம். ராபித் - 2ஏ 3பீ 3சீ 1எஸ், எஸ்.எப். ஸலாஹ் - 2ஏ 2பீ 5சீ ஆகியோர், சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளதாகவும் அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

# கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை செயலமர்வு




(எம்.எம்.ஜெஸ்மின்)

*கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவர்களுக்கான உளவியல் ஆலோசனை சம்பந்தமான செயலமர்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.*

*பாடசாலை அதிபர் எம்.எஸ். பைஸால் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வளவாளராக கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி முகாமையாளர் நெய்னா முஹம்மட் நௌஷாத் கலந்து கொண்டார்.*



# மறைந்த மு.கா. தலைவர் எம்.எச்.எம் அஷ்ரபின் 75 வது பிறந்த தினத்தை நினைவு நிகழ்வு









(அஷ்ரப் ஏ சமத்)

மறைந்த தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களின் 75 வது பிறந்த தினத்தினை முன்னிட்டு தேசிய ஜக்கிய முன்னணி கட்சியின் தலைவர் முன்னாள் ஆளுநர் அசாத் சாலி அவர்களின் தலைமையில் அஷ்ரப் நினைவு தின பேச்சு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் எம்.எச். அஷ்ரப் பற்றிய பிரதான உரையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க உரையாற்றினார்.

வரவேற்புரையை அசாத் சாலி, மற்றும் முன்னாள் அமைச்சர் அஷ்ரப் புத்திரர் அமான் அஷ்ரப் , தமிழ் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், சிங்கள மொழி மூலம் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் உரையாற்றினார்கள். பிரதான மேடையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ,முன்னாள் அமைச்சர் பேரியல் அஸ்ரப் பிரசன்னமாகியிருந்தனர்.

இந் நிகழ்வில் அஷ்ரபின் குடும்ப உறுப்பினர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், மும்மதத் தலைவர்கள் மற்றும் தேசிய ஜக்கிய முன்னணி உறுப்பினர்கள் பெருமளவில் காணப்பட்டனர்.

இங்கு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க மறைந்த தலைவர் அஸ்ரபின் 1993 ஆம் ஆண்டு தான் மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தால் சந்தித்தோம். அப்போது அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அதன் பின்னர் பொதுசன பெரமுன மற்றும் எனது கட்சியுடன் இணைந்தார். அதன் பின்னர் தேர்தலில் வெற்றி பெற்று என்னுடன் இணைந்து என்னுடன் ஆட்சியமைத்து அரசாங்கத்தை அமைப்பதற்கு விரும்பினார் அவர் ஒருபோதும் எனது கட்சிக்கு எவ்வித பொறுப்புகள், அதிகாரங்கள் கேட்கவில்லை நானே அவருக்கு கப்பல் துறை, துறைமுகம் புனர்வாழ்வு முஸ்லிம் சமய விவகார அமைச்சின் தெரிவு செய்து அவருக்கு வழங்கினார். இதனுடாக கிழக்கு பல சேவைகளை செய்யும்படி கூறினார். அவர் மிகவும் துணிச்சலான, மிகத் திறமை வாய்ந்த, நீதி நியாய மானதொரு அமைச்சராக தனது அமைச்சரவையில் காணப்பட்டு செயல்பட்டார், அவர் ஒருபோதும் தனது அமைச்சினை ஊழல்அற்றதொரு அமைச்சராக செயல்பட்டார். அவர் ஒருபோதும் ஏனைய இனத்திற்கு அநீதி வேறுபாடு காட்டவில்லை. அவர் காலத்தில் அவர் கொழும்பு துறைமுகத்தை மிகப்பெரிய துறைமுகம் திட்டங்களை பிரிட்டிஷ் அரசின் திட்டத்தினை ஆரம்பித்து அதனை நிறைவேற்றினார். அவர் இந்த நாட்டில் புரையோடிப் போயிருந்த அரசியலமைப்பு திட்டத்தை மாற்றியமைத்து என்னுடன் இணைந்து நீலன் திருச்செல்வம், ஜி,எல்.பீரிஸ், அது பாராளுமன்றத்தில் கொண்டுவந்து அனுமதிக்காக நீண்ட நேரம் உரையாற்றினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் – உரையாற்றுகையில்,

மறைந்த தலைவர் இந்த நாட்டில் தமிழ் மக்கள் பிரச்சனைக்காக புதிய அரசியலமைப்பை தொடார்ச்சிய பாராளுமன்றத்தில் மிக நீண்ட நேரம் உரையாற்றிதொரு அமைச்சர் அஷ்ரப் அவர் தமிழ் மக்கள் வரலாறு அவரை மறைக்க முடியாது. அத்துடன் அடையாள அரசியலமைப்பினை விடுத்து தேசிய கட்சிகள் சகலரையும் இணைத்து செல்வதற்காக அவர் தேசிய ஜக்கிய முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்திருந்தார். தமிழ் தலைவர்களுடன் அடிக்கடி ஒன்றுகூடி இந்த நாட்டில் புரையோடிப் போயிருந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அவர் காலத்தில் மிகவும் பாடுபட்ட ஒரு அரசியல் தலைவர் அவர் தமிழ் தலைவர்களை விட சிறந்த தமிழ் பாண்டியத்தியம் கொண்டிருந்தார். என சுமந்திரன் அங்கு உரையாற்றினார்.

சுனந்த தேசப்பிரிய,

மறைந்த அஷ்ரப் மும்மொழிகளிலும் உரையாற்றிக் கூடியவரும் தொலைக்காட்சியிலும் விவாத்திலும் ஈடுபட்டார் அவர் தேசிய அரசியலில் இறுதிக் கால கட்டத்திலல் பயணிக்க முற்பட்டார். சிறிய கட்சித் தலைவரானார் தேசிய கட்சிகளை இணைத்து இந்த நாட்டில் சிறுபான்மை முஸ்லிம் தலைவர் தலைமை தாங்க முடியும் என தேசிய ஜக்கிய முன்னணி கட்சி ஆரம்பித்தார்.

# அமானா வங்கியின் CDM வலையமைப்பு விஸ்தரிப்பினூடாக

## பெருமளவான பகுதிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வங்கியியல் சௌகரியம் ஏற்படுத்த நடவடிக்கை




அமானா வங்கி தனது பண வைப்பு இயந்திர (CDM) வலையமைப்பை விஸ்தரித்துள்ளதாக அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் தனது கிளை வளாகத்தில் 8 புதிய ஊனுஆ களை நிறுவியுள்ளது. அக்கறைப்பற்று (இல. 102, பிரதான வீதி, அக்கறைப்பற்று), பதுளை (இல. 18/1, லோவர் கிங்ஸ் வீதி, பதுளை), தெமட்டகொட (இல. கென்ட் வீதி, தெமட்டகொட, கொழும்பு 9), சம்மாந்துறை (ஹாஜியார் பெலஸ், ஹிஜ்ரா சந்தி, அம்பாறை வீதி, சம்மாந்துறை), நிந்தவூர் (இல. 40/5, பிரதான வீதி, நிந்தவூர்), ஏறாவூர் (இல. 108ஃ5, புன்னகுடா வீதி, ஏறாவூர்), கிண்ணியா (இல. 264, பிரதான வீதி, கிண்ணியா) மற்றும் கதுருவெல (இல. 379, பிரதான வீதி, கதுருவெல) ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த CDM விரிவாக்க செயற்பாட்டினூடாக வங்கியினால் அதன் கிளைகள் மற்றும் சுய-வங்கிச்சேவை நிலையங்கள் போன்ற வலையமைப்பு காணப்படும் 55 பகுதிகளில் 24x7நேரமும் பண வைப்புச் செய்யும் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விரிவாக்கம் தொடர்பில் அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், “எமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற மற்றும் சௌகரியமான வங்கியியல் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்கான எமது முயற்சிகளின் ஒரு அங்கமாக அமானா வங்கியின் ஊனுஆ விஸ்தரிப்பு நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. புதிய ஸ்தாபிப்புகளுடன், அப்பிரதேசங்களைச் சேர்ந்த தனிநபர் வாடிக்கையாளர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு எந்நேரத்திலும் பணத்தை வைப்புச் செய்யும் வசதியை அமானா வங்கி ஏற்படுத்தியுள்ளது.” என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குருப் பிரதான பங்காளராக திகழ்வதுடன், வங்கியின் 29.97% பங்குகளை தன்வசம் கொண்டுள்ளது. IsDB குருப் ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியின் முன்னோடியான செயற்பாட்டாளர் எனும் வகையில், உலகின் சிறந்த 100 உறுதியான இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக அமானா வங்கியை ஏசியன் பாங்கர் இனால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2023 ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட தேசிய நீண்ட கால தரப்படுத்தலில் BB+(lka) எனும் உறுதியான தோற்றத்தை வழங்கியிருந்தது.

ழுசியாயஉெயசந அமைப்பின் ஸ்தாபக அனுசரணையாளர் என்பதற்கு அப்பால், எவ்விதமான துணை, இணை நிறுவனங்களையும் கொண்டிருக்கவில்லை.

# மதீனாவிலிருந்து 15 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(ஐ. ஏ. காதிர் கான்)

குருஃகிரிஃ சியம்பளாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையிலிருந்து இவ்வருடம் (2023) புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய, தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஐந்து மாணவர்களும், பத்து மாணவிகளும் சித்தி பெற்றுள்ளதாக, அதிபர் எஸ்.எம். ஹைதர் அலி தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம், ஏ.எஸ். அபாப் மரியம் - 178, ஏ.ஏ.எம். ஆகில் - 170, எம்.ஜே. அஸ்மா - 162, எம். ஐ. இப்ரா மரியம் - 161, எம்.ஐ. ஹயா ஷரப் - 160, எம். ஆர். லீனா - 159, எம்.எப். அஹமட் - 158, எம்.ஐ.எப். இமானி - 155, எம்.ஐ.எப். சவீனி - 154, ஏ. ஆதில் அஹமட் - 153, எம். ஏ.எப். ஹனா - 151, எஸ். எம். ஹாமித் - 148, எம். ஏ.எப். அம்ரா - 147, எஸ்.எம்.எப். முஸ்கா - 147, எம்.எஸ்.என். செஸாத் - 147 ஆகிய மாணவ மாணவிகள் வெட்டுப்புள்ளி மட்டத்தை அடைந்துள்ளதாக அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

வகுப்பாசிரியைகளான எஸ்.எல். நிலூபர், எஸ்.பீ.எஸ். மஸீதா, எம். எச். எப். கரீமா, எஸ். சாந்தி ஆகியோரின் வழிகாட்டலில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுள்ள இம்மாணவ மாணவிகள், இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்துள்ளனர் என்றும் அதிபர் மேலும் சுட்டிக் காட்டினார்.




## குவைத் மன்னர் மறைவையொட்டி

# இந்தியா முழுவதும் துக்கம் அனுஷ்டிப்பு





(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

குவைத் மன்னர் ஷேக் நவாஃப் அல் அஹமது அல் சபா சனிக்கிழமை காலமானதை அடுத்து சென்னை தலைமைச் செயலகத்தில் அரைக்கம்பத்தில் தேசியக் கொடி பறக்க விடப்பட்டு துக்கம் அனுசரிக்கப்பட்டுள்ளது.அதேபோல்

குவைத் மன்னர் மறைவை ஒட்டி, ஞாயிற்றுக்கிழமை இந்தியமு ழுவதும் ஒருநாள் துக்கம் கடைப்பிடிப்பு என மத்திய அரசு அறிவித்துள்ளது.

மன்னர் ஷேக் நவாஃப் அல் அஹமது காலமாகிவிட்டார். அவரது மறைவுக்கு குவைத் மக்கள், அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள், உலகம் முழுவதும் உள்ள நண்பர்கள், உலகத் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், ஷேக் நவாஃப் அல் அஹமது அல் சபாவின் மறைவையொட்டி துக்கம் அனுசரிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில் குவைத் மன்னர் மறைவை ஒட்டி, ஞாயிற்றுக்கிழமை இந்தியா முழுவதும் ஒருநாள் துக்கம் கடைப்பிடிப்பு என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. குவைத் மன்னர் ஷேக் நவாப் அல்-அகமது மறைவை ஒட்டி இன்று அரசு கொண்டாட்டங்கள் எதுவும் நடைபெறாது எனவும் தேசிய கொடி பறக்கவிடப்படும் கட்டிடங்களில், நாடு முழுவதும் இன்று ஒருநாள் அரை கம்பத்தில் பறக்க விடப்படும் எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அதன்படி, குவைத் மன்னர் ஷேக் நவாஃப் அல் அஹமது அல் சபா மறைவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மத்திய அரசின் உத்தரவின் பேரில் சென்னை தலைமைச் செயலகத்தில் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுசரிக்கப்பட்டுள்ளது.

மன்னர் அஹமது மறைவைத் தொடர்ந்து, அவரது சகோதரரும் உலகின் மிக வயதான பட்டத்து இளவரசருமான ஷேக் மேஷல் அல் அகமது அல் ஜாபர் (83) குவைத்தின் அடுத்த மன்னராகிறார்.

கடந்த 2020-ஆம் ஆண்டு மன்னர் ஷேக் சபா அல் அகமது அல் சபாவின் மறைவுக்குப் பிறகு குவைத் மன்னராக அரியணை ஏறிய ஷேக் நவாஃப் அல் அஹமது, நாட்டின் உள்துறை அமைச்சராகவும் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.தூதரக உறவுகளை மேம்படுத்துவதிலும், நாடுகளுடன் அமைதியை ஏற்படுத்துவதிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.

# அக்குறணை வெள்ளப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட ஜனாதிபதி இணங்கம்

ஜனாதிபதி (17) கண்டிக்கு விஜயம் செய்யும் பொழுது அக்குறணை வெள்ளப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்தபோது அதற்கு இணங்கி யிருக்கியதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில், ஜனாதிபதியின் கீழ் உள்ள நிதி மைச்சுக்குக்கான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் புதன் கிழமை (13) கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் சீரற்ற கால நிலையினால் ஏற்படும் பாதிப்புகள் பாரதூரமானவை .மத்திய கோட்டுக்கு அருகில் அமைந்திருக்கும் நாடு என்பதனாலும் ,வெப்ப வலய நாடு என்ற விதத்திலும் இலங்கையில் அடிக்கடி அர்த்தங்கள் ஏற்படுகின்றன .வெள்ளத்தைப் பொறுத்தவரை அக்குறணையில் பிங்கா ஓயா பெருக்கெடுத்து ஓடி அக்குறணை நகரை ஊடறுத்துச் சென்று கட்டுகஸ்தோட்டயில் மகாவலிகங்கையுடன் சங்கமம் ஆகின்றது.பொல்கொல்லை அணைக்கட்டினால் அங்கு மணல்மேடு குவிந்து நீர் வழிந்தோடாமல் தேங்கி பின்னோக்கி தள்ளப்படுகின்றது. என்ற நிலைமை நீண்ட காலமாகவே இருக்கின்றது

இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுவதைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவொன்றை நான் பதவி வகித்த அமைச்சு ஒன்றின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தலைமையில் நியமித்திருந்தோம்.பிங்கா ஓயா பெருக்கெடுப்பதற்கான காரணங்களை யும்,அக்குறணை நகரம் அடிக்கடி வெள்ளநீரில் முழ்குவதற்கான ஏதுக்களையும் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு விசேட செயலணியும் நியமிக்கப்பட்டிருந்தது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் அக்குறணை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் நான் இந்தப் பிரச்சினையை எழுப்பி



, பிரதேச செயலாளரிடமும் அங்கு வந்திருந்த நகர அபிவிருத்தி அதிகார சபையினருடனும், அனுமதியளிக்கப்படாத கட்டிடங்களை அகற்றுவதற்கு ஏதும் உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்று கேட்டேன். அவ்வாறான நடவடிக்கைகள் குறைவாகவே உள்ளன .மேலும் முன்னெடுப்புகள் தேவை.

V.(A)9 பிரதான வீதியில் 8ஆம், 9ஆம் மைல் கல்களில் இருந்து ,அம்பேதென்ன சந்தி வரை பல்வேறு பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டி உள்ளன .அத்துடன் அதற்கு சிவில் குழுக்களின் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் தேவைப்படுகின்றது. இதற்கு நகர அதிகார அபிவிருத்தி சபை சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது .நீண்ட காலமாக கையாண்டு வரும் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு இன்னும் தாமதமாகிக் கொண்டே போகின்றது.

மாவட்ட அபிவிருத்தி சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஞாயிற்றுக்கிழமை(17) கண்டிக்கு வரவிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த கூட்டம் முடிவடைந்தவுடன் அக்குறணை வெள்ள பிரச்சினை தொடர்பில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எங்களுடனும், அதனோடு சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடனும்,முக்கியஸ்தர்களு டனும் சிவில் சமூகத்தினரு டனும் கலந்துரையாடி நிலையான தீர்வை நோக்கி எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பதை ஆராயவிருக்கிறார் என்றார்.



டுபாயில் நடைபெற்ற காலநிலை மாற்றங்களுக்கான ஐ.நா சர்வதேச மாநாட்டில் இலங்கை இளைஞர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பேருவளை பிரதேச சபை மற்றும் இளைஞர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர், பொறியியலாளர் ஹஸீப் மரிக்கார் ஐக்கிய அரபு இராச்சியத்தின் முன்னாள் சமூக மேம்பாட்டு அமைச்சரும் தற்போதைய இராஜாங்க அமைச்சருமான கௌரவ ஹெஸ்ஸா இஸ்ஸா புஹைடை சந்தித்த போது...

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.